பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

இஃது

இந்திராயன் படைப்போர்

இரண்டாம்பாகம்.

தென்புரவைபூர்
சுந்தப்பிள்ளை குமாரர்

அலியார்ப்புலவரவர்கள்

பாடியது.

பாசிப்பட்டணம்,
மீர்முகம்மதுசாகிபவர்கள்
குமாரர்

...நூறுமுகம்மதுப்புலவரவர்கள்

உத்தரவின்படி
சேலம்,

ஷேக் முகியித்தீன்புலவரவர்களால்

பார்வையிடப்பட்டுச்
சித்தாதிரிப்பேட்டை

நாராயண... முதலியாரவர்கள்

தமது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

௧௮௭௩-நவம்பர்மீ.

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

இஃது

இந்திராயன்படைப்போர்

இரண்டாம்பாகம்.

3364

கண்ணிகள்.

சீரார்முரசடிப்போர் சிறந்ததாமென்னவுலா
நேராகக்கேட்டே நில்லாதங்கேகியவர்
முரசந்தனையெடுத்தே மோட்டானைமீதேற்றி
அரசர்தெருவீதிகளு மயல்நகருந்தானடித்தார்
பறைபோடக்கேட்டுப் பனிமதான்தாதியர்பால்
நறைசேரும்வீதியெல்லாம் நல்லமதிப்பாக
ஏதோமுழக்கமிதிங் கென்னென்றாள்பெண்கள்சொன்னார்
மாதேயுனக்கு மணமானதாலிகட்ட
நாடுநகரமெல்லாம் நன்றானகோட்டைகள்
கூடுபடையரசர் கூறியசொற்றப்பாது
செய்யமுரசறைந்தார் தேசமெங்குந்தான்சிறப்பாய்
ஐயமில்லையென்றங் கறைந்தார்கள்தாதியர்கள்
கூறியசொற்கேட்டவுடன் கோதைபனிமதிதான்
தேறியெனைக்கொள்ளவந்த தேர்வேந்தாரெனவே
சேதியேகேட்டவுடன் சேயிழையாரோதுரைப்பார்
மாறிலான்தூதர் முகம்மதற்றசூல்மருகர்
மக்கத்தலிதலையை மாட்சியுடன்கொண்டுவந்த
துக்கமொன்றுமில்லாத தோன்றல்வடோச்சியென்றார்
வள்ளல்வடோச்சியென்ற வாசகத்தைக்கேட்டுவல்லி
தள்ளொணாதலிதலை தானேறுவென்றேசிரித்து (௰)

சும்மாவிருங்கள் தோன்றலலியார்தலையை
இம்மாநிலத்திலுள்ளோ ரெவரேனும்வெட்டுவரோ
அம்மாடிசும்மா வறைந்தார்கள்பொய்யதனைத்
தெம்மாடிப்புத்தி சிறந்தஇந்திராசாக்கள்
நிறையாயதிந்நிலையே நீதியுள்ளராஜாக்கள்
கறைசேருந்தாகிதலை காணுமிதிங்கென்றுசொல்லி
மனமீதுதானே மதித்துமங்கைதானிருந்தாள்
கனமானகன்னியர்க்குக் கன்னிபனிமதிதான்
இன்னமொருநாளி லிச்செய்கைகாண்பீரென

நன்னயமாய்த்தாலிருந்தாள் நாரிபணிமந்திதான்
அப்போநகரிதுள்ள வானதெருவீதியெல்லாம்
செப்பமுடனேசிறப்புச் செய்தார்கள்வீதியெல்லாம்
கன்னல்கமுகதிருற் காவணங்கள்செய்திடுவார்
வன்னமுடன்கோலம் வடித்தெழுதியெல்லோரும்
வாழைபிலாநடுவார் வர்சமலர்தூக்கிடுவார்
தாழைமலர்பிச்சிச் சரந்தொடுத்துப்பந்தரிலே
சொன்னக்கால்நாட்டித் துலங்கவேபந்தலெல்லாம்
வன்னக்கால்நாட்டி வளர்பிறைபோற்பந்தரிட்டு
பன்னீருஞ்சந்தனமும் பாங்காய்த்தரைமெழுகி
நன்னீருங்கும்பகுடம் நன்றாகவேபதித்து (௨௰)
பொன்னெடுத்துப்பட்டாடை பொங்கவேதான்விரித்துக்
கன்னிபணிமதிக்குங் காணும்வடோச்சியர்க்கும்
கலியாணமென்றங்ஙன் களித்தாடிப்பாடிநிற்பார்
அலியானவர்போனார் ஆர்க்கும்பயமில்லையென்பார்
பாடுநர்கள்பாடிடுவார் பாவையர்களாடிடுவார்
நாடுநகரமெல்லாம் நல்லோலைகொண்டிடுவார்
நீரோசைகொண்டிடுவார் நீதிமுனுத்தானிலுள்ளோர்
தாரோசையான தவில்திமிலைகைமணியும்
காளமுழக்கிடுவார் கட்டியங்கள்கூறிடுவார்
மேளமுழக்கிடுவார் மேதினியெல்லாமறிய
குருப்பூட்டும்வேதக் குறிகாரரைப்பார்த்துத்
திருப்பூட்டும்வேளைபலன் செப்புமென்றன்ராஜனுந்தான்
குறிகாரர்சொல்லுவர்கள் கோவேகேளின்றையிலே
தெறிவானபொல்லாங்குந் தீவினையும்பின்வருமே
குருதியலைபோலுங் கோட்டைவெளிமீதோடுங்
அரிதரிதுசொல்லுதற்கிங் காராலுங்கூடாது
பட்டத்துயானை பதையாமலேயடியும்
கொட்டமிடும்வாம்பரிதான் குருதிதனிலேமிதக்கும்
திட்டமுடன்தேர்களெல்லாஞ் செங்குருதிமீதமிழும்
வட்டப்பரிகள் வாளால்அழிந்துவிடும் (௩௰)
மணமுடிக்குமன்னன் வடோச்சியினுலாமிதென்றூர்
ரூணமுடனேயில்லுலே கூடுமணமென்றுரைத்தார்
வேறுபகையிங்கிலையே வேதியரோபொய்யிதெனத்
தேறுதலாய்மாப்பிள்ளையைச் சீக்கிரத்திலூரைச்சுற்றி
ஊர்கோலம்வாருங்களென் றேதினிந்திராயன்
கார்மேகம்போலே கலந்தங்கவர்கூடி
அங்கனுரைத்தபடி தோன்றல்வடோச்சினுக்கு

அங்கமெங்குஞ்சோடனையா யானவடோச்சிறுக்கு
தங்கமெனவேயணிந்து தான்மணக்கோலமதாய்
இங்கத்தேரோடுமுன்னே தோன்றல்வடோச்சிறுக்கு
பங்கமொன்றும்வாராமற் பண்பாரிபடைக்கலங்கள்
அங்கமதின்மீதே யணிந்தார்களேயழகாய்
படையாயுதங்கள் பதினெட்டுந்தானணிந்து
கொடிகளதுவுங் கொடுத்துநினைவுள்ளடக்கி
தாலிகட்டுமுன்னுமேல தாகிசெய்திவாராமல்
வேலிகட்டிக்காவெனவே வேதனிடத்திரந்து
தன்சேனையுள்ளவர்க்குத் தானங்குபதேசபண்ணிப்
பின்பழிகள்வந்தாலும் பிசகாமல்வெட்டுமென்றே
உறுதிதனையுரைத்தங் குற்றபெலந்தான்கொடுத்து
மறதியில்லாவீரமணி மன்னன்சிரமேலணிந்து (௪௰)

பிறிதியில்லாநல்விறையைப் பிந்தாதுளத்திலுன்னி
பொறுதியாய்மற்றவர்கள் பொற்பாகவேசூழ
இந்திராயன்சொற்படிக்கே யேந்துமசுவித்தேறி
சந்திரனுஞ்சூரியனும் தான்வாரதொப்பாக
வீதிவருகையிலிவ் வேந்துமகள்நல்லக்காள்
ஓதியெழுதிவிட்ட ஓலைவந்துசேர்ந்ததுவே
வாசகத்தைப்பார்த்தான் மகள்தாலிவாங்கினதை
வேசமுடன்தாகிதலை வெட்டிக்கொண்டுவந்ததுவும்
எழுபுரிசைகளு மிழிவாயழிந்ததுவும்
தாரும்புறக்கான்வேதம்நாட்டிலுள்ளோர்கொண்டதுவும்
பிணக்காடுமாமலைபோற் பெண்களின்கூக்குரலும்
மணக்காடுகொண்டலியின் மக்கத்திற்போனதுவும்
வடோச்சிமணமுடிக்க வந்ததலையானதுவென்
றடாச்செயலாவென்புருடனுனென்றங்கிருந்த
வந்தவிபரமதை வாசித்துமன்னனவன்
அந்தமுள்ளவோலையைப்போட்டலறிவெளியாகினனே
சிந்தைதளர்ந்திந்திராயன் சேனுபதியிருக்க
வந்தவிதியென்னெனவே வாய்புலர்ந்தங்கேதுசொல்வான்
இப்புதுமைகண்டிலனே இடிவிழுந்ததுபோலே
அப்பெண்டின்தாலியதை யறுத்துவந்ததெவ்விதமோ (௫௰)

புத்திகெட்டோனானாலும் போற்றெனதுதாகிதலை
சத்தியுடன்கொண்டுவரத் தான்மனதுவந்திடுமோ
எத்தினன்ஆலிதலை என்றேவடோச்சிநம்மைச்
சுற்றினன்பாவியவன் சோர்வையறிந்தோமிலையே

என்மருகனை வதைத்திங் கிப்படியுஞ்செய்வாரோ
கன்மம்நினைத்தானே கண்டவர்தான்சொல்லவில்லை
களவாணிப்பையலெனக் கையுமெய்யாய்க்கண்டேனே
இழவானதைக்கொணர்ந்தா னென்மனதைத்தான்கெடுத்தான்
மீனைமீன்பாய்ந்ததுபோல் மீளவும்வந்தென்பதியிற்
றனையுடன்போறானே தானவிமேலெல்லிருந்தோம்
சத்திகெட்டபாவியென்றுதான்வந்தா னெல்லிடத்திற்
புத்திகெட்டிங்கென்மருகன் போந்ததலைகொண்டுவந்தான்
ஆலிதலையென்றல்லோ அன்றிழுத்தோழமைச்சுற்றி
நீலிசெய்யாவேலையிந்த நெட்டூரஞ்செய்தானே
என்னகொடுமையிதிங் கெப்போதுங்கேட்டதுண்டோ
பின்னமில்லையிங்கிவனைப் பேய்க்குவிருந்திடவே
கன்னெஞ்சன்செய்தபிழை கண்டதில்லைக்கேட்டதில்லை
வன்னெஞ்சனிப்பழிதான் வாராதென்றேநினைத்தான்
வெட்கமில்லையூர்கோலம் வேடிக்கையாய்வாரான்
புட்குவிருந்தாகானோ புகழார்பணிமதியை
ஆலியின்பதம்பணிந்திங் காலமணஞ்செய்யவந்தான்
கலியோஇதென்னபழி கன்னெஞ்சன்செய்ததுதான்
அற்பசுகந்துக்கமென்றே யானமனத்தெண்ணிலனே
சற்பனைகள்செய்தானே சண்டாளனென்றுபின்னும்
ஆலநயிக்கேவான்கொண் டாயிழையைச்சேரவந்தான்
காலனவனைத்தொடர்ந்த காலமதுதானெனவே
கையெடுத்தசாமியிப்போ காட்டிக்கொடுத்தவனே
வையகத்தில்ஆலியிங்ஙன் வந்திலனேனென்றுணிக்க
நாக்கழிவுசெய்த நமிமருமகனைப்பிடித்து
வாக்கழிவுசெய்து வடோச்சிதனையும்பிடித்து
ஒருவர்க்கொருவர்பார்த்திருக்க வுற்றுநான்வெட்டேனேல்
திருமனையாளப்பிறர்க்குத் தான்கொடுத்தோனவனென்று
இந்திராயன்சினத்தங் கேங்கியேவாடிநின்று
பந்திபரியானைப் படைகளெல்லாந்தான்திரட்டி
வழிகேடுசெய்த வடோச்சிதனைவெட்டுமென்றான்
பழிகாரனெங்கெனவே படைகளெல்லாந்தானெழுந்து
கலியாணவீடு கனத்தெழவார்விட்டதுபோல்
மலிவானவீதிவலம் வாரதெருப்பக்கமதில்
கூத்தாடுமேயொருபாற் குரவைகளுமேயொருபால்
ஆத்தாடியென்றங் கையமொருபக்கமதில்
மாப்பிள்ளையென்பர்சிலர் மாபாவியென்பர்சிலர்
கோப்பழியச்செய்தான் கொடியவடோச்சியென்பர்

இப்படியேதான்சூழ்ந்த ஈப்போலச்சேனைபது
மைப்படியுங்கண்ணூர்கள் மலைபோலவேசூழ
ஆனையொடுதானை யடர்பரியின்சேனைகளும்
சேனையொடுதேர்கள் திசையெங்குஞ்சூழ்ந்தனரோ
சுற்றிவளைந்தார்கள் தோன்றல்வடோச்சிதனை
எற்றவெளியாயிற்றென் றேயகிவடோச்சியர்கோன்
சூழ்ந்தபடையுடனே தோன்றுமதியேயுரைப்பான்
சார்ந்தவரோயிந்த்ராயன் தன்சேனைதான்மாளப்
கொண்டுழக்கித்திளைக் குறையாமலேநிறுத்தும்
என்றுஞ்சுவர்க்கமுண்டும் இப்படைக்குநாம்சலித்தால்
உயிரழிவதல்லாதிங் கோர்கதியுங்கிட்டாது
வயிரமுடனேதினைவாய் வாய்த்தபடைவெட்டுமென்றான்
எந்தல்வடோச்சிசொல்ல எல்லோருஞ்சம்மதித்தே
சார்ந்தவர்கள்தங்களுடன் தானும்வடோச்சியுமாய்
வாளையுறைவிட்டார் வடோச்சியுடதன்படைஞர்
கோழைப்படாதுயிரைக் கொண்டுதப்புவோமெனவே
நாளையெல்லாம்ஆவியவர் நன்றாய்வருவரென
ஆளோடுஆளிடற ஆனையொடங்கானைதன்னை (அ௰)

வாளோடுவாளிடற வாசியொடுவாசிதன்னைத்
தோளோடுதோளிடறத் துட்சணமெல்லாம்பொருத
வேலோடுவேலிடற வீதியெங்குங்கூக்குரலாய்
நாலாவகைப்படையும் நாடெல்லாந்தான்சூழ
அப்போபணிமதியென் றனபெயர்ப்பெண்ணைநிந்து
தப்பல்லோவந்ததுகாண் தாரணிக்கென்றேயுரைத்து
எண்ணெண்ணுத்தாதியர்க ளிடம்வலமுங்கூடிநிற்கப்
பெண்ணுனுமந்தப் பேர்தாதியர்க்குரைத்தாள்
நகர்பாழதாகுமென்றே நான்முன்னேசொன்னேனே
பகர்தாகியின்தலையென் றேபகர்ந்தேன்முன்னாலே
சொன்னதுமெய்யாயிற்றிப்போ சோர்வுவருமிந்நேரம்
என்னபழிவருமோ எஃபிறவிதாவியும்போய்
தனித்தாள்பிறவியெனச் சற்றேமனதுடைந்து
இனித்தான்நபிதமக்கிங்கீமான்தான்கொண்டிலையேல்
எல்லோர்க்குமங்கிலியம் இப்படித்தானேகெடுங்காண்
வல்லான்தனக்கு வந்தபுலியாமலியார்
இந்தவூருள்ளவரோ வேந்தலலியார்க்கெதிரி
அந்தவுலகுள்ளவரும் ஆவியென்றலஞ்சுவர்கள்
அப்பனுக்குப்புத்தியில்லை ஆர்சொல்லுங்கேளான்காண்
செப்பமுடன்பட்டாற் றெரியுமென்றேயுரைத்தாள் (௯௰)

இந்திராயன்படைப்போர்.

தந்தைதாய்தன்பேரிற் றுனாசைவிட்டொழிந்தாள்
முற்றுமிறையோன் முகம்மதுற்றசூல்நபியை
நெஞ்சில்நினைந்து நெடியோனைத்தான்புகழ்ந்து
வஞ்சிதுவாச்செய்தாள் வடோச்சிபடைவெல்லவென்றே
மணவறையிலேதாலி வாங்கினேபோலாயிற்றின்று
குணமாய்முடிக்கபட்டேன் கொன்றபழிநின்றிலையே
தாலிகட்டலாமெனவே தான்வாளுறைவிடுத்தான்
காலிகண்டவெம்புலிபோற் கடும்படையில்வாள்வீச்சில்
வெட்டொன்றுகண்டம்ரண்டாய் வீழ்ந்தார்கள்சேனையெல்லாம்
பட்டென்றிருந்த பரந்ததெருவீதியெல்லாம்
சட்டென்றுதானிங்ஙனே தாகிதனைகொண்டேவந்தான்
விட்டுதோஇங்கிவனை வீண்பழிதானென்றுரைத்து
கணைமாரிதான்சொரிந்தார் காவலர்கள்சேனாரண்டும்
அணையானதைமுறித்தங் கானவெள்ளம்பாய்ந்ததுபோல்
செந்நீர்கடற்போலே செறிந்துபரந்தோடிவிட
வன்னிதனில்வீழ்புழுப்போல் மாண்டார்படைவீரர்
குப்பல்குப்பலாகக் குவிந்ததேகோடிபிணம்
தெப்பக்கட்டைப்போலே செறிந்தபிணங்கோடிகோடி
வெட்டிக்கைதான்சலித்தான் வேந்தன்வடோச்சியர்கோன்
நட்டித்தண்ணீர்போலே நான்குதிக்கிலும்பரந்து (௱)

நடுக்கடலின்கப்பலைப்போல் நான்குதிக்கிலும்பார்த்து
வொடுக்கமென்னசெய்வமென்றங் குள்ளேமனதிடைந்தே
என்னசெய்யப்போகிறோமென் றேங்கிமுகம்வாடி
மன்னன்படைதனக்கு மற்றேதுசெய்வமென்று
ஓடியேபோனாலுலகஞ்சிரிக்குமென்றே
ஆடித்துரும்பதுபோல் அங்ஙன்வடோச்சிநின்று
பெண்ணாசையால்நமக்குப் பேரினித்தான்போச்சுதென்று
கண்ணாசையல்லாது காரியம்வீணாயிற்றென்றே
இந்திராயன் தனைக்கிவ கெதிர்நாம்காணாது
அந்தமாச்சென்றிங் கலமசீர்ந்துவெட்டிப்பின்னும்
ஆலிசொல்லைக்கேட்டோமே ஆலிநகர்தூரமல்லோ
சோலிவருத்தினமே தூரமல்லோஆலிநகர்
ஆர்வருடப்பயணம் ஆலிவரப்போகில்லை
தூறுவருத்தினமே சோர்வுவருமேவுயிர்க்கு
ஒருநாட்பொறுத்ததில்லை யோலைவந்துகெட்டதுகாண்
கருவாம்பனிமதியைக் கண்டியிரைத்தோர்த்திலமே
காற்றோபறந்துவரக் கத்தனலியார்தாமிங்கு
காற்றுகிலுஞ்சிலநாட் கழித்தல்லோகண்டிடலாம்

இரண்டாம்பாகம்.

மாற்றான்வளைந்துநிற்க மற்றேதுசெய்வதினி
தேற்றாதொருவனையும் செய்யுமிடுக்கவிதோ (௩௰)
கடலோவழிந்துவரக் கப்பலோஆலியவர்
கடலோடுங்கப்பலென்றாற் காணுஞ்சிலநாட்கழித்து
இடறானவிப்படைக்கிக் கிப்போதுதவாதே
படரானகாரியந்தான் பார்மீதுவந்ததுவே
புள்ளேபறந்துவரப் போர்செய்யும்ஆலியவர்
புள்ளென்றாலுஞ்சிலநாட் போனபின்னர்கண்டிடலாம்
வெள்ளமோஆலியவர் வேகமுடனோடிவர
வெள்ளமேயானாலும்விள்ளுசிலநாட்செல்லுமே
உள்ளபடைக்கிப்போ துதவிலையேலோர்நொடியில்
எள்ளலறுஞ்சிவனுக்கிங்கிப்போதழிவாகும்
ஆதவனோவோடிவர ஆலியவரிங்குவர
ஆதவனேயானுமா றைந்துநாழிகையாகும்
மீதமல்லோசெல்லு நிமிசத்தில்நம்முயிர்போம்
நாதராய்வந்துதித்த நபிமருகர்வாராரோ
வல்லிபனிமதியும் வள்ளல்நபிதன்கலிமாச்
சொல்லிமணஞ்செய்யுமென்ற சொல்லும்பொய்யானதுவோ
சல்லியமாய்வந்ததிப்போ தார்குழலிசொற்கேட்டு
வல்லவன்றன் தூதர்முகம்மதுற்றசூல்நபிக்கு
கலிமாவுரைத்தோமே கன்னிநமக்கெய்துமென்று
அலிமாமன்னர்தீனிலாகுமெனக்கொண்டதற்கோ (௩௨௰)
மெல்லிவாயப்படைதனிலே மேன்மையுயிர்போகின்றது
கலிமாப்பலனதினாற் கத்தனலிவாராரோ
றுதுசொல்லிவிட்டாளோ தோகைபனிமதிதான்
வாதுசெய்துநம்முடைய வாறலைப்போக்கிடவோ
இந்த்ராயன்தாளதனி லிப்போபணிந்தாக்கால்
முந்தியேதானிதனை மோசஞ்செய்தோமாகையினால்
வந்தியாநம்முடைய வாறலைப்போக்கிடுவாள்
அந்திமதிபோலேமுக மாகினமேயென்றுடைந்து
நம்போலமன்னவர்க்கு நாளுஞ்சிரிப்பாயிருக்கும்
வம்போபடுந்துயரம் வந்ததெல்லாங்காண்பமென
ஈடுசெய்யக்கூடாதிங் கின்றுமவுத்தாய்விடுவோம்
நாடும்படியேலுமட்டும் நாம்பார்ப்போமிங்கிவனை
ஆருதவியொன்றுமில்லை அல்லாவுன்தஞ்சமென்றே
பேருலகில்மவுத்துப் பிந்தாதுவந்ததென்றே
கைசலிக்கவெட்டிக் கஸ்திவரும்வேளையிங்ஙன்

இந்திராயன்படைப்போர்.

வையகத்திலேயாசாய் வந்த அலியார்முரசை
எடுத்துமுழக்கிடலா மிந்நகர்க்குமந்நகர்க்கும்
அடுத்தநகரல்லவது ஆருலன்டுராமுண்டும்
முரசோசைகெட்டிடுமோ முன்னவிதான்வாராதுலண்டோ
கனைசேரக்கூடாதே காரியமும்வினையிற்றே

ஆசையொழிய ஆயிழையைச்சேர்ந்திலமே
பாசையெல்லாம்வீணுச்சே பாவியான்செய்வேலை
நாமேயிழந்திட்டோமே நாயனவிசொற்கேட்டாற்
கேடுவாராதெனவே கெம்பீரமாய்நினைத்தோம்
இத்தனையுமெண்ணிமன பீடுசெய்யும்வேளையங்கு
சத்தியெல்லாங்கெட்டுமனந் தள்ளாடிவாளதனை
நின்றுநிலத்தெறிந்தே நெஞ்சமெல்லாந்தான்கலங்கி
அன்றலியார்சொன்னமொழியாமறிந்துபார்ப்பமென
தந்தமுரசுதன்னைத் தாமுழக்கிப்பார்ப்பமென்றே
அந்தமுடனெடுத்தங் கடித்தான்வடோச்சியர்கோன்
முரசையவனெடுத்தே மோகமுடனேமுழக்க
ஆசாவிதஞ்செவியி லப்போதுகேட்டனவே
மக்கநகர்க்கடுத்த மாகணத்தீச்சம்மாத்தில்
சக்கனவியேறிக் கனிபசிக்குத்தான்பறித்து
உணவருந்தும்வேளையிலங் கோச்சமுரசானசத்த
மணமுடனேகேட்டிடவே மண்டிக்காலோடவிதாம்
இந்தமுரசோசையதங்கேந்தல்வடோச்சிகையில்
முந்தவேநாம்கொடுத்த முரசினதுசத்தமல்லோ
சத்தமுழக்கினதாற் றானேவடோச்சியர்க்கு
மெத்தவினைவந்திட்டதோ விளம்புமனதயறிய

இந்தச்சமையமங்கு யாம்போயுதவாட்டால்
முந்தநாஞ்சொன்னதெல்லாமோசமிறைக்கோது
இப்போதுநாமேகி யெதென்றுதவாட்டாற்
றப்பல்லோமுன்சொன்னதெல்லாந் தனியனுக்குமோது
ரச்சமாத்திருந்த வேகனவியோர்நினைவாய்
மூச்சடக்கித்தீன்தீன் முகம்மதெனவேயுரைத்து
பாய்ச்சலுக்குக்கால்மடக்கிப் பாயும்புலிபோலவிதாம்
நீச்சலால்நீரினிமேல் நில்லாதுநீந்தததுபோல்
பாய்ந்தாருலுத்தான் படைக்களத்திற்சென்றங்கனம்
வாய்ந்தவடோச்சிமுன்போய் வருந்தாதேவந்தனென்றூரீ
உள்ளங்கலங்காதே யொன்றுக்குமஞ்சாதே
தள்ளவொண்ணூச்சேனை தனைமடிப்பனென்றூலி

கண்டான்வடோச்சியர்கோன் கத்தனவிதம்மையங்கு
கொண்டாடிச்சத்தமிட்டான் ஆதாயுதவிசெய்தானென்றே
விண்டான்சலாமலிக்கு வெற்றிவடோச்சியர்கோன்
குன்றுப்பிறத்தியலி கூறினாரந்நேரம்
இந்த்ராயன்சத்தமதிங் கேளாவிதென்னவென்றான்
சந்தோஷிம்வீரலியார்தாம்வந்ததைப்பார்த்தே
வேளைக்குதவினவர் வீறுபெற்றஆலியென்றங்
கேழையாய்ப்போகுமுன்னே யேகிவந்தஆலியென்றே (௱௨௰)

வாடும்பயிரதற்கு மழைவந்தவாறதுபோற்
றேடும்பொருள்வழியச் சிக்கினதுபோற்றினமும்
கண்குருடரானவர்கள் கண்பெற்றவாறதுபோல்
பண்புகுதாயீக்குரலிற் பண்புகுந்தவாறதுபோல்
உண்டுடுக்கவொன்றுமில்லா துற்றவெளியோர்கள்
கண்டெடுத்தநற்புதையல் கைசேர்ந்தவாறதுபோல்
பிள்ளையில்லாமாளிடர்க்குப் பிள்ளைவந்தவாறதுபோல்
கொள்ளைவரும்போது கோவலிந்நீரிக்குவந்தீர்
உயிர்போயிருந்தவுட லுயிர்பெற்றவாறதுபோல்
கயிர்பெற்றுக்கொள்ளக் கத்தனவியிங்குவந்தீர்
அத்தனருளாலாயில்வா ழகுமதருன் நன்மகனும்
பற்றலர்கள்போற்றிசெய்யும் பார்த்திபன்ராவுத்தபிள்ளை
கற்றவர்கள்கண்டு களிதீரும்வாறதுபோல்
எத்தலமும்போற்ற விங்குதவியாதிசெய்தான்
அந்தாற்புயத்தோ னவடோச்சியர்கோன்
பிந்தாதலிவந்தார் பெரும்படையைவெல்லவென்றே
அந்தநிலத்திற்போட்ட அடிவாளைத்தானெடுத்தே
நந்தாப்பணிமதினா னம்முடனேசேர்வலென்றும்
தம்படைக்குச்சேதமில்லை நம்மஅலிவந்ததினால்
தெம்படைக்கியிப்படையைச் சின்னபின்னமாயதிர்த்து (௱௩௰)

'ஆண்டாடவேண்டுமென்று சோராதவ்வாளாலே
கொண்டாடியேபண்டையைக் கூறுகூறுக்கினனே
அப்போபணிமதிதா னலிவந்தாரென்றறிந்தங்
கிப்போவடோச்சியுட னீடுசெய்யமன்னரில்லை
தப்பாதிங்கேரமக்குத் தானேமரணமென்று
குப்போடுதானினைத்துக் கோமானுதவியென்றான்
என்றுமகிழ்ந்திருந்தா னிந்திராயன்தானறிந்தான்
இன்றுவந்தவேயவிதா னிப்படைக்குநல்லதென்றான்
அன்றுபடைத்தலைவனை யழைத்தங்கிந்த்ராயன்

இன்றிங்கலிதலையை யியம்புநீதத்திடென்றான்
சென்றங்கவனிரங்காச் சேனைதனிலேபுகுந்து
கொன்றிடவேகோபமதாய்க்கோடிபடைக்கூட்டிச்சென்றான்
அல்லாவுன்பக்கலென ஆலிநினைந்தேதுரைப்பார்
நில்லாதிங்கிப்படைமுன் நின்றுகொ‌ல்லென்பின்னரொன்றார்
சொல்லானதுகேட்டுச் சொல்வான்வடோச்சியர்கோன்
நல்லாயிற்றென்றே நடுப்படையிலேபுகுந்தான்
அஞ்சாதேயென்றங் கலியப்போதாமுரைத்தார்
பஞ்சாகநெஞ்சம் படைத்தார்படைவீரர்
ஆனைத்திரள்தனிலே யாலிபுகுந்தார்ப்பரித்தார்
சேனைத்திரள்தனிலே சென்றான்வடோச்சியர்கோன் (௱௭௰)

ஆசுஇந்திராயனுட வஞ்சேனைவெள்ளங்களை
போஜரெனவந்த புகழலியார்வெட்டினமா
திரையெழ்சமுத்திரம்போற் சேனைபதியுடனே
புரையினுமென்றும் புத்திசற்றுமில்லாத
சபுலக்கெனுமரசன் தான்வந்தான்சேனையொடும்
கபுலத்துடனவிதாம் கையிலொன்றுங்காணமல்
அணியும்படைத்தலைவ ராயுதமொன்றங்கெடுத்துத்
துணிவோடலியார்தான் துய்யகரத்திற்பிடித்து
நெத்திக்கையானதிலே நீமுக்கவேண்டுமென்றே
பத்தியடித்தார்யானை பாரமலைபோல்விழுந்த
பொற்றேரிலேறிவந்த போஜன்வடோச்சிதன்னைக்
கற்போடுநின்று கண்டாள்பனிமதிதான்
பூரித்துடலமெல்லாம் போற்றித்துவாவிரந்தாள்
காரிடிந்துவீழ்ந்தனபோற் கரிபரிகள்மாண்டதந்த
வேடிக்கைபார்த்துநின்றாள் வேந்தர்படுங்களத்தி
லோடித்துரத்தியலி யுற்றதோலாலடித்தார்
கொம்புபறிபட்டதுண்டக் குஞ்சரங்களோர்கோடி
அம்புபோற்பாய்குதிரை யடியற்றதோர்கோடி
ரதங்கள்நுறுங்கினது நன்றுயொருகோடி
மதம்பேசிவந்தோர் மடிந்தார்சவுக்கதனுல் (௱௮௰)

எந்தலிந்திராயனுக்கங் கேற்றதொருதம்பியவன்
வாய்ந்தவவன்வந்தே வகுப்பனிந்திராயனுக்கு
வாகனமுமில்லையொரு வாளும்அலிகையிலில்லை
ஆகவெறுங்கையாக யானதோலொன்றுளது
எதிர்த்தவரையானைகளை யேறுகின்றவெம்பரியைச்
சரித்தான்தோல்தன்னாலே தாங்கரிதுமன்னவரே
தம்பியுரைத்தமொழி தன்னைக்கேட்டிந்திராயன்

வெம்பிபேகண்சிவந்து வீணனலிவந்தானே
எத்திறனாலிதலை யென்றேவடோச்சிநம்மைப்
புத்திமடிந்தோமே போரிலலிவந்தானே
சத்தியுடன்பொருவோர் தாமங்கெனவழைத்துப்
புத்திகளைச்சொல்லிப் பொருவில்லாவீரர்களாய்
ஐயாயிரங்கோடி யானதேர்வேந்தர்களைப்
பொய்யாதனுப்பிவிட்டான் போந்தலியைத்தான்வளைந்தார்
தம்பிமுகிலினைப்போற் றறுகாதுதாள்வளைந்தான்
தும்பியெழுகடற்போற் றுங்கரலியைவளைத்த
வெம்பரிகளெண்ணமில்லை வேந்தாலியைவளைந்த
தம்பமில்லானலியங்குன் தறுகாதுதானெதிர்த்தார்
கன்னிபனிமதிதான் கண்டுகையைத்தானெரித்து
மன்னனித்திராயன் மாபடையனுப்பிவிட்டான் (௱௯௰)

ஐயோஅலிபொருவ ராற்றுவரோஇப்படைக்குக்
கைசேதம்வாராமற் கத்தாவுன்காவலெல்றாள்
ஆயுதமுங்கையிலில்லை அலிக்கல்லாவுன்காவல்
தாய்பிள்ளையாலலிக்குச் சார்வுதுணையிங்கில்லையே
ஊருமலிக்கிங்கில்லையே யுற்றதுணையும்மில்லையே
ஆருந்துணையிங்கில்லையே அல்லாவுன்காவலென்றாள்
ஊக்கனையாலியையுங் காப்பாய்வடோச்சியையும்
தொக்கெனவேயெண்ணிவந்தார் சூழ்படையைத்தானலியார்
பந்தையொத்தகொங்கைப் பனிமதிதனீதுளாகால்
விந்தையலியைப்படைகள் வெள்ளமெனவேவளைந்தார்
அன்றிரவிற்பாத்திமத் தங்குதுயில்கொள்நேரம்
ஒன்றியாய்ப்போனஅலி யுற்றசெய்திகேட்டிலமே
எந்தநகர்போனாரோ வென்னிடத்துஞ்சொல்லிலையே
இந்தநகர்வந்திலையே யேதோவெனச்சலித்து
அசாத்தியுடன்துயின்றா ரன்றுகனவொன்றுகண்டார்
விசாரத்துடனலியார் வெறுங்கையாலோர்படையை
தோலாலடித்திடவுந் துட்டர்படைமாண்டிடவும்
போலக்கடற்போலே யுள்ளபலசேனையெல்லாம்
சேரமடிந்திடவுஞ் செங்குருதியோடிடவும்
பாரமதயானையெல்லாம் பாய்புலியைச்சூழ்ந்திடவும் (உ௱)

கலங்கியலிநின்றிடவுங் காயம்அலிமேற்படவும்
துலங்குமிந்தவாறாய்த் தூயநபிதம்மகளார்
ஆதியறிவித்தமனும் ஆயிழையார்கண்டெழுந்தார்
சீதமதியையழைத்த செய்யிதுற்றகுல்மகளார்

திகைத்திட்டேதான்விழித்தார் செங்கரங்கால்தானடுங்க
அடுத்திட்டுடையவன்பா லன்பாய்த்துவாயிரந்தார்
கையெடுத்துத்தானேத்தி கக்கலிடத்தோர்நினைவாய்
உய்யப்படுத்த வுடனே துவாவிரந்தார்
கத்தனேயுன்புலிதாம் காணுதராச்சியத்தின்
மெத்தவும்வடுப்படவே மேலவனீபார்ப்பதென்ன
பிசபிற்செய்யப் பிரித்தாய்குருனதிலே
காசகலவெட்டிக் கலிமாவிற்சேர்ப்பதற்கு
வேகமெனவுத்தனுக்கு வெட்டுவதுமுன்னுதவி
ஆகமறிந்தவனீ யார்துணையாமெங்களுக்கு
உத்தனுடவாள்குதிரை யுள்ளதையுநீயெடுத்தாய்
என்றனக்குவேறுதுணை யேகனேயுன்னையல்லால்
வேறொருவர்தானுமில்லை வேதனேயாலியவர்க்
கூறுகளே துவந்தா னுரைக்கின்றவுண்மையதாய்
உன்னைவிடமாட்டேனிங் குற்றதுதான்சொல்லிவிட்டேன்
என்னையவர்கையா லெடுத்தடக்கிக்கொள்ளுமட்டும் (உ௱௰)

வின்னபங்கம்வராமல் வேந்தனேநீகாப்பாய்
அன்னமுகம்மதுக்கும் அன்பானநல்மருகர்
பொல்லாக்கடுங்காபிர் போரதனிலேபுகுந்து
கல்லாதபேரையெல்லாங் கலிமாவிற்சேர்க்குகின்ற
எல்லாப்புகழு மிறையேயுனக்கல்லவோ
வல்லாவுனக்கு வருவதென்னவேகமது
ஆகும்பொழுதுன்னுதவி யாகுமோஎப்போதும்
சாரும்பொழுதார்தடுப்பார் தக்கோனேயுன்விதியை
இந்தச்சமயமதி லிப்படிக்குச்செய்வாயோ
தந்திடுநீவாள்குதிரை தன்னையலியார்க்கொடுக்க
சொந்தமெனக்கப்பரைத்தான் துய்யவனேநீகொடுப்பாய்
உந்தன்கிருபையதி னுள்ள அலிக்கிப்போது
உயிருக்கவத்தம்வந்தா லுன்னைவிடேனென்றனக்குக்
கயிறுகொடுத்தேநீ காப்பாத்தவேண்டுமெங்கள்
நீயனுப்புர்தாலி நிஜமென்றிங்கெண்ணிவிட்டேன்
நாயனேயுன்னிடத்தில் நானனவிழ்த்துத்தந்திடவோ
நாச்சியார்கேட்டவுட னயன்கிருபையொடு
மாட்சியாயாதி மலக்குகளைத்தால் கூவி
என்தோழர்தம்மகளா ரென்னிடத்திற்கேட்டதுவா
பிந்தாதுநான்கபூல்த்தான் பிரியமுடனேபுரிந்து (உஉ௰)
இப்போகொடாதிருந்தா லென்மேல்வெறுப்பாவரோன
அப்போகொடுத்தனனெல் றத்தமலக்கோடுனாத்தான்

ந்தாதுமாவாளும் பேரானகம்பளையும்
நந்திவீரபட்டருமே நான்கொடுத்தேனென்றுரைத்தான்
வந்ததப்போசிர்சிறந்த மாளுர்கள்நாயகம்பால்
அந்தரத்தில்நின்றங் கனுமனித்ததேபரிதான்
பந்தமெனப்பாத்திமத்துப் பாலைவசெவியுற்றதுவே
அந்தரத்தைப்பார்த்தார்கள் அன்பானபாத்திமத்து
துல்துல்தனைக்கண்டார்கள் துல்புக்கருவளுங்கண்டார்
வல்லவீரபட்டருமே வாகாகவந்தனமோ
கண்டுமகிழ்ந்தே கத்தனவிபாற்செல்கென்றார்
வண்டைப்போற்பறந்துபரி வானகத்தேதாவியதே
துல்துல்பறந்துசெல்லத் துய்யகம்பர்வாற்பிடிக்க
வெல்லவென்றிவீரப்பரி விண்ணிற்பறந்துசெல்ல
வாளும்பறந்திகலும் வல்முழுத்தானெங்கெனவே
நாளும்நபிதம்மகளார் நல்லதந்தையோடுரைத்தார்
நடந்தபுதுமையெல்லாம் நாயனபிதாம்கேட்டு
அடர்ந்தபடைவெல்ல அலிக்கிறையருள்வனென்றே
பதவியார்நந்நபியும் பாத்திமத்துமங்கிருந்தார்
அதபுடனேஐந்தாறு மன்பாயறியாத (உகூய)

காபிர்களைத்தூட்படுத்தக் கம்பருடன்வாளுமொக்கத்
தாபரமாய்வீரபட்டர் தான்போயிருந்ததங்கு
வீரதண்டையோசையிட வெம்பரியுந்தான்கடிந்தங்
காரவேதான்முழுத்தான் அந்தரத்திற்சென்றதுவே
படைகளத்தைக்கண்டே பரிதானனுமனிக்கக்
கொடைக்கரத்தாராலிகையிற் கொள்கையுடன்வாள்புகுத
தலையிலேவீரபட்டந் தான்போயிருந்ததுவே
தொலையிற்பதின்காதம் தாண்டும்படைநடுவில்
தோன்றினார்கம்பர்வந்து தாண்டுமிடக்கைதனிலே
செண்டிகழும்வீரபட்டஞ் சிங்காலிகண்டனரோ
வலங்கைபதின்காதவழி வம்பர்படைநடுவிற்
றுலங்கவேதுல்துல்வந்து தோன்றினதையாலிகண்டார்
ஆலிதமக்கப்பாலே யாகுமெழுகாதவழி
வாலிபமாய்நின்றார் வடோச்சியர்கோனும்படையும்
நடுப்படையிலேபொருதார் நாயன்புலியாலிநின்று
வடுப்படாத்தீனவர்கள் வல்லாயுன்காவலென்றார்
வாளையுறைவிடுத்து வம்படையுட்புகுந்தார்
சாளயமென்றிந்த்ராயன் தம்பிதலையாகவந்தான்
பதினெட்டுலட்சம் படையானையோடெழுந்தான்
அதிரிட்டதேரங் கதுவுமெழுகோடியுண்டும் (உசூய)

ஐம்பதுகோடி யடத்பரியின்றன் னுடனே
ஐம்பதுகோடி அபசிகள்தன் னுடனே
வாரதுடன்காலாட்கள் வருமைம்பான்கோடியுண்டும்
பாரதிரவுங்குவத்தே பண்பாலியையவளைந்தார்
கம்பளையும்ஆலியையுங் கார்மேகம்போல்வளைந்தார்
உம்பரெல்லாங்கஞ்சுகண்டகு குளம்பயத்துதானிருந்தார்
துல்துலெழும்பியதைச் சூழ்ந்தபடையுட்புகுந்து
மல்லுப்பொருதனபோல் மதயானைமத்தகத்தில்
வம்புபடமிதிக்கும் வாத்றெறிக்கமண்டபத்தில்
கொம்புகளிலேமிதிக்கருங கூத்தாமெத்தகத்தில்
சென்றுகொள்ளகேம்பரத்தச் சேர்படையையகருத்திறின்றார்
தன்மேலவுங்கூந்தலிள மானுஞ்பணிமதிகரு
வண்டர்களைத்தாறெகரும் வண்மைவடோச்சியற்கும்
தண்டரவமாலைபுனை தற்கேமகிழ்ச்சிகொடு
பணியாரஞ்சுட்டுப் பலபேய்புசிப்பதற்கு
அணியானைமூளைதனை யந்ததுல்துல்கொட்டியதே
கலியாணமாவிடிகளுல கட்டளைபோற்றகம்பர்குத்தப்
பெலியாக்கிவிட்டார்கள் பேய்நரிக்கும்நாய்களுக்கும்
அலிவாளின்வெட்டா லாழச்செந்நீரோடியதே
கலிபோவிதென்றே கடந்தார்கள்மீந்தவர்கள் (௨௫௰)
பட்டணமெல்லாஞ்சிவப்பாய் பரவிரத்தாறோடியதே
துட்டர்தனையடக்கும் துல்துல்அலிகிட்டவர
தட்டமுடன்கம்பர் தானும்அலிகிட்டவர
இட்டமுடனின்றே ஏகமகிழ்ச்சியதாய்
சங்கைச்சலாமுரைக்கத் தான்பிறத்திசொல்லினரோ
அங்கமெல்லாந்தான்மகிழ்வா யாதிதனைப்புகழ்ந்து
முத்தியிட்டுத்துல்துல் முகம்தடவியேசிரித்துச்
சத்திபெறும்வாம்பரிமேற் றாலிதாமேறினரோ
தீன்தீன்முகம்மதென்று செப்பினார்கம்பரப்போ
வான்பூமிமற்றிடமும் வகுக்கும்வல்லானைப்புகழ்ந்தே
வேந்தர்பலகோடி வீற்றிருக்குமிந்திராயன்
சாந்துகொடுசெய்த தங்கக்கொலுமண்டபத்தில்
எதிரேதான்மிதிக்கு மேந்தலவி துல்துலது
மாறியேவானமட்டு மாவோடும்வானரம்போல்
குஞ்சரத்தின்மத்தகத்துங் கோடுகளிலுமிதிக்கும்
அஞ்சலெனமாநிலத்தி லன்றுவலஞ்சுற்றிவரும்
தோரணத்திலேமிக்குந் தூளாக்குமாமலையை
ஆரணத்தார்வாம்பரிதாம் அலைகடலிலேமிதிக்கும்

மன்னர்கள்தன்தலையை மண்டிமிதித்தேபுடைக்கும்
ஜின்னச்செய்த்துவருஞ் செம்பினத்திலேமிதிக்கும் (௨௬௰)

டம்பாம்போலாடிநிற்கும் பார்த்தவர்கண்ணெட்டாது
செம்படைவைத்துக் கையெடுத்த சேர்கோயிலையுடைக்கும்
திரும்பிவருஞ்சுற்றிவருஞ் செம்பிணத்திலேமிதிக்கும்
அரியவல்லபொன்முடியை யார்ப்பெழவேதான்மிதிக்கும்
சக்கரம்போற்சுற்றிவருஞ் சண்டமெனவேயதிரும்
உக்கிரமாய்த்தேரதனை யொன்றுநூறுக்கிவிடும்
பாரண்டமுங்குலுங்கப் பந்தாடலாய்த்திரியும்
தூர்ப்படுத்திவிடுந் துட்டனையங்கோட்டும்
கெட்டியாய்த்துல்துலது கெம்பீரமாய்த்திரியும்
வெட்டினூராவி வெகுதளங்கள்மாண்டதுவே
எண்ணெண்ணூச்சேனைகள்தா மேகமாய்மாண்டதனால்
மண்ணெல்லாந்தான்பிணங்கள் மாமலைபோலானதுவே
மாண்டதைக்கண்டிந்த்ராயன் மற்றுமங்குபிரங்கியும்
கூண்டபடைவெல்லுகின்ற கோடுமூலக்கைகளும்
அந்துமானென்ற அரசனையுஞ்சேனையையும்
முந்துகொடும்போர்க்களத்தின் மோதியவிழையப்பிடித்து
வந்திடுகளென்றே வருத்தானிந்திராயனப்போ
அமரிலெதிர்த்தே யவிழையவளைந்தாரவர்கள்
சமரிலவிவாள்வீசத் தான்மடிந்தாரெல்லோரும்
ஆயுதங்கையுள்ளவனு மப்போமடிந்தனனே (௨௭௰)

பாயுமவிகைவாட் பகலொளிபோலேவெறிக்க
கோல்கொண்டுகம்பர் குத்தவடோச்சிவெட்டக்
கால்கொண்டுதுல்துலது காபிலாயெல்லாமடிக்க
நாலாவிதமாக நாடியிருபேர்படையும்
வேலாலெறிவார்கள் வில்மாரிதான்பொழிவார்
தண்டத்தினாலடிப்பார் சாடுவார்மேல்விழுவார்
துண்டப்படுத்துந் துல்துலதுதானங்கனே
மேலும்பதாதி மிகுத்தவிழைத்தான்வளைத்தார்
நாலாகடற்போலே நாடியவிழையவளைந்தார்
சுத்திதனையவிதான் கண்ணூரவேபார்த்துச்
சத்திபெங்கேவாளுக்கென்றே தாம்கோபமாய்நினைந்து
தாளாயதுபார்க்கவெனத் தாம்வீசினூரவிதாம்
போரையெவர்பார்த்திடுவார் பிணங்கள்மலையானதுவே
முனைத்தாங்வெளிகளைத்தான் மூடுமலையதுபோல்
அனைத்தாரோயாவிவெட்டி யாறுகச்சோரியுற

௰௮ இந்திராயன்படைப்போர்.

சோரியலையாற்றதிலே தோன்றவேதேர்கள்மூழ்கும்
காரிடிபோலானையெல்லாம் கண்டதுண்டமாயோடும்
உரக[illegible]க்கைபோல வோடுமுழுப்பிணங்கள்
பெ[illegible]ம்போலானைச்செவி மிறந்தாமலே[illegible]கும்
சீர்செ[illegible]டபூமியெல்லாஞ் செங்குருதியாமேருயம் (௨௮௰)

போர்கொண்டமன்னருடற் பிரண்டோடுமந்நதியில்
மின்றுமழைபோல் மெய்யாலிலைகயுறுவாள்
பின்றுமலிவீசப் பிறத்திற்கம்பர்தாமெருகக
பட்டாசவுகருடனே பாரப்பிரஙகியுடன்
துட்டனந்துமாறுடனே தோன்றுபடைமாண்டதுவே
மிஞ்சினபேர்மாற்றமல் வெருண்டாரொன்செய்வமென்றே
செஞ்சவடித்துக விட்டநில்லாதோட்டினதால்
முதுகுட்புறஙகாட்டி முறிந்தோடிப்போனதுவே
மெதுவற்றபேர்களெல்லா மேன்மையில்லாதோடினரே
ஆள்மடிந்தார்கூட்ட மணிமடிந்தாரஙகைகொண்ட
வாள்மடிந்தவேந்தாவர் மட்டில்லாதேமடிந்தார்
குதிரைமடிந்தமலேக குஞ்சரஙகளெண்ணிலேயே
மதுரைநகர்களாகமதோ மறுதிசையில்கொக்கனுவோ
படுகளத்தைக்கண்டே பதைத்திந்திராயனுந்தான்
கெடுமதியனுவிறல்ல கெட்டிகெட்டியென்றழுதான்
செங்கண்ணிற்றீயெரியச் சேர்த்தான்படைக்கலன்கள்
பஞ்சமுறுந்தன்விடையிற் பட்டாமுஞ்சாத்தி
நாமக்குறிபோட்டு நற்சாணிச்சாம்பரிட்டுக்
காமமேகொண்டவர்போற் கவசமெடுத்தணிந்து
கச்சைகட்டித்தொங்கல்வைத்துக் காலிற்கழலணிந்து (௨௯௰)

விச்சையுடன்காலின் வீரதண்டைதானணிந்து
வச்சிரத்தின்ஜோடும் வாய்ப்பாயெடுத்தணிந்தங்
குச்சிதங்களுள்ளதெல்லா மொக்கவேதானணிந்து
பொன்முடியுஞ்சூடிப் புத்ததனைத்தானெடுத்து
மூன்றுள்ளதேவர் முப்பத்துமுக்கோடியுமணிந்து
ஆபரணமெல்லா மநேகமெடுத்தணிந்து
தாபரமாய்க்கட்டாரி தன்னிடுப்பிற்சேர்த்துக்கட்டி
கல்லுங்கலனுங் கடுகவெடுத்தேயணிந்து
வெல்லவெனச்சக்கரங்கள் வெண்டையமுந்தானணிந்து
பட்டயமுஞ்சொட்டையதும் பரிசையுமேதானணிந்து
சட்டைபன்றுதமழுத் தாபரமாய்த்தானணிந்து
வேலாயுதமணிந்து விசும்வலையும்மெடுத்துக்

கோலாகலமாகக் கோத்தஅம்புதானணிந்து
துணியுடனம்பைச் சுகமாயெடுத்தணிந்து
காணியென்றதண்டமதைக் கையாரவேயெடுத்து
வாளையெடுத்தணிந்து வாளுமதிலேபூட்டிப்
போளையடுக்கவெனப் பூமிதனில்வைத்திருந்த
புத்துகான்தன்னைமுக்கால் பூரித்துச்சுற்றிவந்து
சற்றுங்கலங்காமற் றுணிபிர்த்தமும்பார்த்து
பூசைதனைமுடித்துப் புத்துகானைத்தொழுது (ருா)

மீசைதனைமுறுக்கி வீழ்ந்துபலதெண்டனிட்டு
நல்லமுகூர்த்தமறிந் தற்றுளேமுன்புவைத்து
வல்லமையைத்தானினைந்தே மன்னவன்தானேதுசொல்வான்
மனையாளைத்தானழைத்து மன்னனிந்திராயனுந்தான்
வினையவிலையென்றுவர வெள்ளணீறுதாருமென்றான்
மனையாள்மனம்பதறி மன்னவன்முன்னிதுரைப்பாள்
எனையாளுமன்னவனே இந்தவிதமேன்றுணிந்தீர்
என்னுடனுஞ்சேனைகள்தா பிரணகளத்தில்மாய்ந்ததுவே
நன்றோநீர்போறதுதான் நாடாளுமன்னவனே
அன்பம்வராதுமக்குச் சோர்வுபடுஞ்சேனையெல்லாம்
தம்பமெனவும்மைநம்பித் தானிருந்தேன்மன்னவனே
போகாதீராவியிடம் போர்வேங்கையாகுமது
நோகாதேயிங்கிரும்நீர் நஞ்சேனையையனுப்பும்
சேனையனுப்புமென்றே சேயிழையாள்சொன்னவுடன்
மானைத்தானேபார்த்து மன்னவன்தானிதுரைத்தான்
இந்தநினைவேனுனக்கிங் கிப்பேரளம்புகுந்து
அந்தஆவியைப்பிடித்திங் கன்பாகத்தானறுத்து
கட்டியெந்தனுனையதின் கால்நடுவிலேபோட்டே
எட்டியிடறுட்டா லென்பேரிந்திராயனல்ல
தம்பிபழிக்காலிதலை தான்வாங்குவேனெனவே (ருாய)

நம்பியதோர்தாகிபழி நாளும்வடோச்சிதனை
நம்புசவுலக்குபழி நான்காண்பேன்பிரங்கியால்
அம்பில்விளையுந்தல்துல் அதனையுமேநான்கொல்லுவேன்
முஆத்தானைவென்ற முறையில்வடோச்சிதன்னைச்
சுஆத்தானும்வைக்கத் துணிந்தானேஞுலியென்போன்
சேயிழையேவெண்ணீறு சீக்கிரத்திற்றருமென்றான்
தோயுமான்கன்றுள் சொல்மனதொத்தநேரம்
நன்மைபெற்றுவாருமென நாரிவெண்ணீரளித்தாள்
நின்மையறியாதான் திடச்சித்தமாய்மகிழ்ந்தான்
தும்பியலங்கரித்துச் சூழ்பாகன்கொண்டுவந்தான்

நம்பினேனென்றுபுத்தை நாடியிந்திராயனவன்
உம்பலத்தின் மீதேறி யோர்கோடிப்பொன்னளித்தான்
அம்பரமெல்லாந்தொனக்க வானதகாராமுழங்கத்
தம்பமென்றேசாமியென்றே தாண்டும்படையைவிடுத்தான்
ஐயாயிரங்கோடி யரசரிருபக்கம்வர
எய்யாததேர்களொரு வெழாயிரங்கோடி
பதினாயிரங்கோடி பாக்சானபாய்பரியும்
எதிராடுமானையதுங் கேழாயிரங்கோடி
பதினாயிரக்கோடி பாங்கானகாலாட்கள்
அதிரானமேளவகை யையாயிரங்களுண்டும் (௩௨௰)

கொடிகளோம்பாறுயிரமும் கூடியேயின்னடக்கப்
படிதான்கிடுகிடுடெனப் பார்தட்குனிர்துவிட
இடியும்பயற்தொடுங்க எக்காளந்தான்முழங்கச்
சடுதியிற்கோட்டைவிட்டுத் தான்புறத்திலுற்றனனே
யாதாழியாய்ச்செலவே அப்போபணிமதிதான்
கோதாரியானபடை கண்டேகுடற்கலங்கி
வேதாழியாகுமென்றங் கெண்ணிவிசாரமுற்றுத்
தாதியொருபெண்ணைவிட்டுத் தந்தையர்க்குச்சொல்லுகென்றாள்
ஓதுநீயிப்போ தண்டுபடைபோறதல்லக்
காதலாய்வல்லவனின் கருணையுள்ளநாதருக்கு
ஈமான்கொண்டிட்டா லிந்தகளையாண்டிடலாம்
சீமானலியுடனே சென்றெதிர்க்கக்காலமல்ல
போனபடையெல்லாம் புரண்டதேயல்லாது
ஈனமில்லாதிங்குவந்த தேதேனுமுண்டோகாண்
கேடுவரும்போதுமதி கெட்டுவருமுன்னாலே
நாடிநபிதீனிலுற்றால் நாயனருளுண்டாகும்
இன்னஞ்சிலகால மிருந்தரசிங்காளவென்றால்
வன்னமுகம்மதுட வண்மைபுருக்கான் தனையே
நெஞ்சிற்கொள்கவில்லையெனில் நின்சேனையுள்ளதெல்லாம்
பஞ்சிபடும்பாடு பட்டிடுமென்றேயுரைநீ (௩௩௰)

வெட்டுக்கருதசிரம் வெற்றியலிக்கென்றுசொல்லு
முட்டுப்படப்போறாய்நீ மோசம்வருமென்றுசொல்லு
ஆலநபியுல்லா அவர்கதாஞ்செய்யுந்துவாக்
காலமெல்லாங்கைக்கொள்ளுவான் கத்தாவென்றேயுரைநீ
அழிந்துவிடுமுன்னாலே யாலிபதந்தன்னிற்புக்கிக்
குனிந்தீமான்கொண்டாக்காற் கூடலாஞ்சொர்க்கத்திலே
கத்தியெடுத்தாலோஅலி கண்டதுண்டமாக்கிடுவார்
புத்திமதியில்லாட்டாற் புத்திசொன்னார்கேட்டிலையோ

ஆலயத்தின் புத்தைநம்பி யாவிதனைபோக்காமல்
பாலையொத்ததினைப் பருகட்பலமோட்சமுண்டும்
ஆனசிங்கமாமலியொன் றப்பனுடன் சொல்லுவைநீ
பானமுதமானநல்ல பயகாம்பர்தம்மருகர்
இந்நகரைத்தான்கவிழ்க்க வேந்தலவியார்க்கேலும்
சொன்னபடிகேட்டுத் துரையலி [illegible]பத்தான்பணிந்தால்
இருநகருந்தான்பிழைக்கும் [illegible] லாச்சொர்க்கங்கிட்டும்
அன்னஅலிபலத்தை ஆராலுங்காணரிது
சத்தப்பெலனுள்ள அலி சங்கைநபிதம்மருகர்
உத்தமொழிசொன்னேனு னுண்மையென்றேநீநினைந்தால்
இத்தரையிலின்ன மிருக்கலாஞ்சீவனொடும்
புத்தியிதிங்கென்றே பூராகவெண்ணிச்சொல் (௫௪௰)

பத்றலரைவெற்றிசெய்யும் பரராஜதுல்துலது
இந்திரக்கமாட்டாதிங் கேகனருள்மெத்தவுண்டும்
தந்தையர்க்குச்சொல்லுமவர் தங்காலமல்லவிது
விந்தைபெரும்ஆல்நபி வெற்றிபெறுங்காலமிது
கத்தியல்லஆலிகைவாள்காலனொன்றேயுரைநீ
வெற்றிபெறவேண்டுமென்றால் வேதரலிதாள்பணிந்து
புத்தியுடனீமானைப் பூண்டுகொள்ளநல்லதென்று
சொற்றிறமாய்ச்சொல்நீயெனத் துய்யநகப்பன்வசம்
அருசிற்புலியான ஆலியவராகுமென்றே
ஒருசொற்பகர்ந்தேனு னுண்மையெனவேயுரைநீ
வேண்டாம்படைபோக வீரத்தைவிட்டிடச்சொல்
ஆண்டோனுடைய அலியோடேதானெதிர்த்து
கோபமெடுத்தாக்காற் கூடிவருந்தீனரகம்
கோபத்தைவிட்டுவிட்டாற் கூடலாஞ்சொர்க்கநகர்
அந்தநபிமாளிடவ ராமெனவேயெண்ணிவிட்டாய்
இந்தப்புவியி லிருப்பவரைபோலவல்ல
சாலஅவர்பாதந் தருத்தருமட்டாகும்
ஏவஅவர்சிரசங் கேகனறுசைத்தொடுங்காண்
அந்தநபிதம்மருக ராலிபுலியென்றுசொல்நீ
சந்தமுடனுள்ளீமான் தான்கெண்டேனுமென்றுசொல் (௬௫௰)

என்னுடையதந்தையர்க்கங் கிப்போதுரைத்திடுநீ
முன்னும்பின்னுமஞ்சாமல் முழுதுநான்சொன்னதைச்சொல்
ஆறுண்டுத்தூரம் அரைநொடியில்த்தஅலி
நீறுபடுத்திவிட்டார் நீண்டஇபுனியனை
வேறுநினைவாகாது வெற்றியுடனீமானைப்
பேறுதவுதந்தையர்க்குப் பெற்றியுடனேயுரைநீ

தேவுகளும்பூதமிந்தத் தேசமேல்வாராது
தாவுழ்வயதெனக்குச் சாற்றுமூவாயிரமே
ஆனையெழுநூறை யாகுமொருகையாரத்
தானேபிடித்தெறிவன் சத்திபெலதீயழியாய்
மலையைப்பிடுங்கி மதிளாகவைத்திடுவேன்
அலையடிக்கும்வாரிதன்னை யப்புறத்தேபோக்கிடுவேன்
பூவுலகிலெர்க்கெதிரி போர்க்கொருவர்காணாது
மேதவருலகுள்ளவரும் சோரநடுக்கிடுவார்
பொழுதுநிலவும்வழி போகஅஞ்சுமெந்நகரம்
தொழுதபதம்பணிவார் துட்டனொல்லாமென்பனைநிதம்
நித்தந்தங்கம்பொன் கொடுப்பே னீதியுலகத்தவர்க்குச்
சத்தமுழக்கிவிட்டாற் றுங்காதிடியொதுங்கும்
குருவழிக்காற்றைத் தூசனிப்பேன்கையார
ஆருதீயை யவிப்பேனொருநொடியில்
பந்தெறிவேன்பேர்மலையைப் பாரதூரங்களெல்லாம்
இந்திரனையிக்கழைப்பே னென்பெயரிந்த்ராயனென்றுன்
முந்தியுலகறிய மூடாநீயுன்பெயரைச்
சந்தாபமில்லாமற் றுன்மொழிவாயென்றனனே (சா)

சொல்லுவதுகேட்டலியார் துட்சனுகேளெனவே
நல்லதிங்குன்வீரமெல்லாம் நானறியச்சொல்லினையே
உன்னைப்போல்ராஜாக்க ளொருகோடிவந்தாலும்
என்னுடையகம்பருக்குக் ஈடுசெய்யமாட்டார்கள்
நானுஞ்சிறியவன்காண் நாயன்புலியாலியென்பேர்
தீனும்புறக்காணுடைய தீனயியின்நல்மருகன்
பூவுலகிலேயிருப்பேன் பொன்னுலகிலும்மிருப்பேன்
நாவுகொண்டுனைப்போலே நான்பெருமைபேசறியேன்
சாவும்பொழுதனைப்பார் தன்பெருமையானதெல்லாம்
ஏவும்பொழுதிங் கிதிலொன்றும்வாராதே
திறத்தையுடையவனே சிங்கமென்பதுநீயே
நிமத்தபடையுன்றனைப்போல் நீள்புவியிற்காணாது
வென்றேன்வெகுபேரை வீராதிவீரனீயே
கண்டேன்வெகுநகரைக் கண்டதில்லையுன்னகர்போல்
பேரழகுமுன்றனைப்போற் பேருலகிற்கிட்டாது
ஆரவர்களுன்றனைப்போல் அதிகமுற்றசீமான்கள்
சீரவேயுன்படைபோற் சேனைபதிதானுமில்லை
ஆரவேயுன்றனைப்போ லரசபாரங்களில்லை
குலத்திற்சிறியவனீ கோமானில்நீபெருமைப்
பெலத்திலேநீபெரியன் சேரிந்திராயனென்றும் (சாய)

ஆசிழக்கப்போகாதிங் கானதனைப்பார்த்திருந்தேன்
சரசமொழிபோலுமெத்தத் தான்பெருமைபேசுகிறாய்
அழிந்துவிடுமுன்னாலிங் காதிபுறக்கானதிலே
குளிர்ந்தீமாய்க்கொண்டாக்காற் கூடலாஞ்சொர்க்கநகர்
ஒழிந்துவிடுங்காயிரொன்றால் வதைப்பேனுன்றன்னைவிடேன்
தெளிந்தகவிமாச்சொல்லினாற் சீமானாய்நீயிருப்பாய்
விடேனென்றசொற்கேட்டு வேந்தன்மனமழன்று
சடேரென்றேவில்லெடுத்துத் தார்க்கணையைத்தான்றிரித்து
கோதண்டவாளிதன்னைக் கோத்திந்திராயனப்போ
மூதண்டமுங்குலுங்க மோதுபரிதல்துலுக்கு
வலக்காலிற்பாயவிட்டான் வலுவாகத்தல்தலனா
துலக்கமாய்ச்சத்தமிட்டுத் அம்பியதின்மத்தகத்தில்
மலைந்துவிழுந்து மத்தகத்திலேமிதித்துத்
தலையுடனுங்கோடுகளும் தானடனமாடும்பரி
வலையன்வலைவளைந்த வாறதுபோற்சுற்றிவரும்
தொலையிலேபோய்மீண்டும் தோன்றல்சிரமேல்மிதிக்கும்
சிகரமணிமுடியிற் சீக்கிரத்திலேமிதிக்கும்
நிகரொருவரில்லையென்றே நின்றுமுக்காற்சுற்றிவரும்
மன்னன்முன்னேவந்து மலைந்தனபோற்றாங்கிநிற்கும்
பின்னுமிந்திராயனுட பின்புறக்குமுன்புறக்கும் (சஉ

வீரமுடிதன்னையங்கு வீறுகவெற்றிவிடும்
ஆரபாரத்தோ டங்கலர்ந்துதிரியுங்குதிரை
நீறுகுத்துமாப்போலே நின்றுதலையைத்துவைக்கும்
ஆறுதலாய்ப்பின்னு மடுக்கவேவந்துநிற்கும்
சுவாமிதுணையெனவே தோன்றலிந்திராயனப்போ
அவாமிகுதியான அநேகரத்நமாமுடியை
பின்னுமவன்சூடிப் பிரகாசமாயொளிர
மின்னுமழைபோலெங்கு மிகுவாளிதொட்டனனே
எண்ணாத்துநாட்டயண மெத்திசையுமம்படைகள்
கண்கொண்டுபாருகெனக் கத்தனவியஞ்சாது
சேனைப்படைநடுவே சேர்ந்தாரிந்திராயனப்போ
சோனைபோல்வாளி சொரிந்தானேயாவிகண்டு
அந்தவேளையங்கு னரசனிந்திராயனுட
சுந்தரஞ்சேர்வேளமுன்னோர் அலங்கிநின்றாவ்வேளை
இரும்புத்தடியாலெறிந்தானேயிந்திராயன்
வரும்போதடிதன்னால் வயிற்றினிடைப்பட்டதுவே

இடிபட்டவாறதுபோல் எண்ணிநிற்கும்வேளையிலே
அடியற்றுப்போகுகின்ற அந்தஇந்திராயனப்போ
அம்பெடுத்துத்தான்றொடுத்தே யாலியின்மேலெய்தானே
வம்பென்றங்காலியவர் வந்தகணையைத்தடுத்தார் (சாய்)

ஏனுமட்டுந்தான்தடுத்தா ரெண்ணிலாவாளிவிட்டான்
சாலவிதிக்கார்தடுப்பார் தான்வாளியொன்றதுதான்
ஆலியவர்மார்புதனி லம்பொன்றுபாய்ந்ததுவே
கோலியேகொல்லனுலை கூறாகப்பாய்ந்தமழு
வந்துபுகுந்ததுபோல் மன்னாலிமார்புதனில்
தந்திரமாய்விட்டகணை தழுகாமற்றைத்ததுவே
அம்புபட்ட வேதனையா லலியபாரிமிகத்தளர்ந்து
நம்புமிறைகாவலென்றே நாடியம்பைத்தானிழுக்க
இழுத்தகணைவாராதங் கேகனவிதம்விதனத்
தழுத்தமாய்த்தானிழுக்க அம்புவாராததினால்
மெத்தவிதனமதாய் மேலிற்பட்டஅம்பைவெல்லக்
கத்தன்செயலெனவே கதறினார்சத்தமொன்று
தச்சஅம்புதானிளகித் தன்னிலைவிட்டேயுருகி
அச்சணத்தில்வாளிதா னங்குருவியோடியதே
ஓடியப்புபாயவங்கோ ராயிரம்பேர்மாண்டார்கள்
நாடியுயிரழிய நாயகலிமேனிதன்னில்
சால்வாத்துத்தானணைத்தே தன்னுமிழ்நீர்தான்தடவ
பெலமானபுண்ணும் பிறங்காமலாறியதே
வேகத்துடன்அலிதாம் வீரவாள்தன்னாலே
தாகத்துடனின்று தனியோனைத்தானினைந்து (சயம்)

வெட்டினாலியப்போ வேளமதின்கையதனிற்
கட்டிபுண்டுவீழ்ந்தனபோற் கையற்றுவீழ்ந்ததுவே
தும்பிகையற்றுவிழச் சோர்ந்துமிகுகுஞ்சரங்கள்
வெம்பிமனக்குழறி வேளமதெலாம்பயந்து
குஞ்சரங்களெல்லாங் குழறியேசத்தமிட்டங்
கஞ்சியதேசேனையெல்லா மங்ஙன்பலிமதிதான்
சிங்கப்புலியாலிவாட் டிறமாய்அழித்ததென்றுள்
தங்கத்துரைக்கம்பரப்போ சோர்ந்தகலையைமடக்கி
ஆனையின்றன்கால்நான்கும் அடிவயிறுமற்றுவிழ
வானைப்படைத்தவனை வாழ்த்தியேகுத்தினரோ
குத்தினார்கம்பர்நின்று குஞ்சரத்தின்கால்நடுவே
அத்திகையிற்கம்ப ரகப்படாமற்றிரிந்தார்
ஆடல்மதகரிதா னுங்கம்பரைவதைத்துப்
போடவழிபார்த்ததப்போ போயினார்கம்பரவர்

துட்டமதகரிதான் சுற்றியேகம்பர்தன்னை
வட்டமிட்டுத்தான்றிரிய வாடாதகம்பரப்போ
அலமலைக்கப்பட்டுமலை யானையுடகால்நடுவே
கலகலெனவேவயிற்றிற் கம்பர்கணைகொண்டுழக்க
மதகரியின்மேலிருந்த மாபாகன்மாண்டனனே
விதம்விதமாய்த்தானடிக்க வெற்றியலிதட்டிவிட்டார் (௪௫௰)

அடிக்கங்ஙனெட்டாம லாலையெனச்சுற்றிவந்தார்
மடிப்புவருமென்றே மன்னரலிஅப்போது
தும்பியுடகொம்புதனைத் துங்கரலிதாம்பிடுங்கார்
சம்பியேவேளமது தான்றூக்கிநின்றதுவே
கைகொடுத்தங்காலியவர் கம்பர்தனையேயிழுக்க
கையைப்பிடித்துதறிக் கால்பிடித்தப்பாற்குதித்தார்
பொய்யைப்பிடித்தவர்கள் போர்க்களத்திலேமாண்டார்
மெய்யைப்பிடித்தஅலி மீளவெட்டியார்த்தனரே
சூருவழிக்காற்றுஞ் சோனைமழையும்போல
நீறாகவேலங்களை நின்றுறுக்கிவெட்டினரே
போர்க்களத்தைப்பார்த்தே புதுமையென்றிந்த்ராயன்
ஆர்ப்பரிக்குந்துல்தலதங் கண்டாண்டமுங்குலுங்க
இந்த்ராயன்பார்த்தங்ஙனே என்னணிஞனிப்புதுமை
சந்திரனுஞ்சூரியனுந் தானுமும்பூமட்டுமில்லை
மூந்தப்பனிமதிதான் மோசமில்லைசொன்னதெல்லாம்
சந்தித்தலியார் தானுனைப்பாரந்நேரம்
விளைந்துகலிமாவுனைநீ விள்ளாதிருக்கினுன்னை
வளைத்துன்றனுக்கை வளையிட்டுத்தானறுத்து
நெருப்பிலேதானிட்டு நீறுக்கிவிட்டிடுவேன்
தரிப்படுதீஙமானித் சங்கையுடன்வாவென்றனர் (௪௯௰)

சங்கையென்றங்காலிசொல்லத் தானிந்திராயன்சொல்வான்
உங்களுட்டீறே வுனக்குறுதியானதென்றே
செங்கண்ணித்நீயொருகச் செப்பிறுறலிமுன்னே
பங்கமொன்றில்லாதான் பாரிற்புகழ்படைத்தோன்
என்மருகன்றாகிதலை யேற்றபழிவாங்கினையே
உன்னைவிடயாரு முலகத்திலில்லையென்றே
பின்னையில்லாதிக்குனைத்த பேயாசேளிட்போது
உன்னைவிடுவதில்லை யுன்சிரசைத்தானறுத்து.
பத்ரகாளிக்குன்றனைநான் பாரப்பெலியிடுவேன்
சித்தமறிபெனவே செப்பிறுனிந்த்ராயன்
உத்தரத்தைக்கேட்டவுடனேடியேசம்பரப்போ
சத்தியுடன்மாபெலமாய்த் தடிமொன்றுதான்பாய்ந்து

கோவிற்கொடிமரத்தைக் குல்லென்றுதான்பிடுங்கி
ஆவித்திந்திராயன்படை யத்தனையுர்தானுழக்கார்
அப்போதலியாரங் காதிதனையேநினைந்து
செப்பமுடன்நீனில்வந்து சேர்ந்தவடோச்சிதன்னை
குப்போடுகூட்டிவந்து கூண்டபடைவீரரையும்
தப்பாமற்றானே தாந்தரமாய்க்கைகொடுத்தார்
கண்ணெரிகோகண்டனமே கத்தாவுங்காவலென்றங்
கெண்ணும்விசாரம்விட்டே ஏகாவுங்காவலென (௪௭௰)

வடோச்சியுந்தந்தளமும் வல்லவாகாவலென்றார்
கிடந்ததுநல்வேட்டையென்றே கெம்பீரத்தோடாலி
நாயனலியார்தலமும் நல்லவடோச்சியார்தலமும்
ஏயவேகாதம் இருபதுண்டாகுமது
வாடாதுநல்ல வடோச்சியுடனேபடையும்
கோடாதுவெட்டிக் குவித்தார்பிணமலையாய்
வெட்டும்பொழுதலியை வேடிக்கையாய்நினைந்தான்
முட்டுவார்கம்பனைத்தான் மோசமறக்காப்பையென்றார்
இட்டும்படையதனைக் கேப்பைக்கழிக்கிண்டிவிட்டார்
தட்டுவாராதலியைத் தான்காப்பாய்வல்லவனே
தொட்டமுத்தார்குவித்தார் தோன்றல்வடோச்சியர்கோன்
புட்டுப்பழங்களைப்போற் பிணங்களையேதான்குவித்தார்
அலியாருரைத்திடுவா ரானஇந்திராயனிடம்
சலியாதிங்குன்றனைநான் தான்கொல்வேன்கேளுமன்று
உன்மருகன்தாகிதனை யோர்நொடியிற்கொன்றதுபோற்
பின்னமில்லாதுன்னைப் பிளப்பேனென்றுலிசொன்னாற்
ஏவண்டியெடுத்தானரசன் சோராதுகோசமுடன்
கவண்டியெடுத்தானரசன் கண்டலிதானேபறித்தார்
செட்டானசக்கரத்தைச் சீக்கிரத்திற்றனெடுத்தான்
தட்டாமறகம்பரதைத் தான்பறித்தாரந்நேரம் (௪௮௰)

குந்தந்தனையெடுத்தான் கூடியலிதான்பறித்தார்
அந்தமுள்ளராஜன் அநேகவிதம்விதமாய்
விந்தைபெறவேதான் வில்லெடுத்தங்கேகோத்தான்
அந்தவில்வில்நல்ல அந்தாத்திற்பாயுமம்பை
தொடுக்கும்பொழுதுகம்பர் அள்ளியேதான்பறித்தார்
அடுக்குங்கணைப்பறித்தங் கார்த்தூத்துண்டமாக்கிவிட்டார்
வில்லைப்பறித்தெடுத்து வேந்தன்கழுத்திலிட்டார்
அல்லில்நடைகொள்குருட னாப்போல்மிகநடுங்கி
ஆலாலமுண்ட வருங்கயல்போலிந்த்ராயன்
வேலாயுதமெடுத்தான் வெற்றியலிதட்டிவிட்டார்

துண்டாய்நறுக்கிவிழச் சோராறுதண் டெடுத்தான்
திண்டாடிகம்பரதைச் சீக்கிரத்திலேபறித்தார்
பல்லைக்கடித்துப்பின்னர் பாராவாட்டாளெடுத்தான்
நல்லதடாவென்றங்கதை நாயனவிதட்டிவிட்டார்
வலையெடுத்தான்வீச வன்மைக்கம்பர்தான்பறித்தார்
நிலையாகவேண்டுமென்றே நீட்டினன்கட்டாரிகொண்டு
நிலையாதென்றேயலிதா னீண்டலகைகொண்டேபடுத்தார்
மலையாமனத்தின் மலைவுகொண்டானிந்திராயன்
ஆயுதமெல்லாமிழந்தங் கானஇந்திராயனப்போ
பாயும்புலிபோலப் பார்த்தான் அலிதனையே (ச௯௰)

சத்துருவலியப்போ சொல்வாரிந்திராயனேநீ
சத்திபெறமாட்டாயே தானிமான்கொள்ளுகென்றார்
வெற்றியுடனுரைக்க வேந்தனவனி துலாப்பான்
சத்தியேயிப்படையில் தாங்காமல்என்னுடைய
கண்டமழிந்தாலுங்காலர்க்குயிர்தோற்றாலும்
முண்டமழிந்தாலு முற்றாசுதோற்றாலும்
மானமழிந்திகோல் வன்பூமியாளுமன்னர்
தானுமழிவரல்லால் றுங்குவரோதம்முயிரை
மாடமழிந்தாலும் மானுமக்கள்போனாலும்
நாடேனுந்தீனையென நவின்றானிந்திராயனவன்
சொன்னமொழிகேட்டலியார் துல்துலதைச்சாரிவிட்டுச்
சின்னபின்னமாகத் திரிந்தங்குவெட்டினரே
சோரியலைமோதிச் சூழனதியானதுவே
வாரிதனிலோடு மரக்கலம்போல்ஆலியார்
கூத்தாடல்பார்த்துநின்றான் கோமானிந்திராயனப்போ
ஆத்தாடியென்றே அநேகம்பேர்மாண்டாரே
காற்றடிபோற்றிரிந்து கம்பாரந்தபேர்படையைத்
தூற்றரோயங்குசில துட்டனர்களி துலைப்பார்
கத்தியோதுல்துலது ஹக்கனலியைப்பார்த்தே
சத்திபெறும்நல்ல சகலாத்துப்போற்றோன்றும் (ரு௰)

கம்பர்தனைப்பார்த்தாற் கண்சிவப்புப்போற்றோன்றும்
துன்பமிகவாகியங்கன் சொல்வானிந்திராயனப்போ
அலிதான்சிவப்பானூ ரானபரிதான்சிவப்பாம்
வலியவினைபண்ணுகம்பர் வந்ததுவுந்தான்சிவப்பாம்
நிறமுமிசைப்போர்த்துதென்றே னெஞ்சுதனிலெண்ணினனே
புறம்பிரியாதேஅலிதாம் பொருபொருதின்றனரோ
முன்னாள்முழுத்தானில் முற்றுமொருகோட்டையுண்டும்
பின்னுளவியார் பொருக்காலேகோட்டையிட்டார்

அந்நாளழுக்கிடங்கிலானநீர்தானுளது
இந்நாட்கிடங்கதனில் விட்டனர்செந்நீரவியார்
கோமானைப்பார்த்தவிதான் கூறுவாரோர்வசனம்
சீமானுமறுகத்தாச் சேர்ந்தபுத்தைத்தானுனைத்து
ஈமானில்வந்திலையோ யேன்கெட்டாய்புத்தைநம்பி
ஆமீனென்றுவானே றறைவாரேநீனில்வந்தால்
கெட்டாயெனவுரைத்த கேவலத்தைக்கேட்டரசன்
விட்டான்தன்யானைதனை வேளமுங்காற்றாக்காது
காலும்பெயராமற் கவிழ்ந்துநின்றுதூங்கியதே
மேலுமணியணிகள் மேன்மையதுந்தானழிய
அற்குறிகள்கண்டதுவுஞ் சொல்வானிந்திராயனப்போர்
தற்சமிட்டாய்நீயவியே சத்திபெலனுன்றனக்கு (௫௱௰)

மாயங்கள்கற்றனையோ மந்திரத்தாலுன்பெலனே
காயங்களுன்றனக்குக் கல்லோகனத்திரும்போ
வேளமதுதூங்கினதும் வில்லுப்பறிபோனதுவும்
ஆளுமுள்ளவாட்டெறித்து மருங்கதைதுண்டானதுவும்
உன்னுடையமந்திரமோ வுங்கள்நபிமாயமிதோ
என்னுடனேசொல்லெனவே யேந்தலவன்கேட்டிடவே
சின்னயில்லைக்கேளெனவே செப்பினாரவிபுலி
வன்னமுறுமித்த மாவிலத்தில்லிவணங்கல்
மாயமும்பொய்மந்திரமும் மனிதர்பண்ணும்புத்ததுவே [ய்
காயமும்பொய்பெண்டிரும்பொய்காணுமக்கள்தங்களும்பொ
அன்னையும்பொய்அப்பனும்பொய் ஆகுமந்தச்சுற்றமும்பொய்
என்னைப்படைத்தஇறை யெப்போதுமெய்யாகும்
பின்னைத்துணைவாராது பேய்கொண்டகாயத்துடன்
சொன்னதிதுவெல்லாந் துட்சணனேமெய்யென்றறி
செய்புந்தவம்நன்மைதின்மை சேர்ந்துவருங்காண்பாயே
ஐயமில்லைக்கத்தனவனொருவனுமென்றே
மெய்யதனையாவிசொல்ல மேன்மையில்லானேதுரைப்பான்
செய்யும்நன்மையுள்ள திருவாகளங்குமுள
கத்தாவொருவனென்றாய் கத்தாவைக்கண்டனையோ
பித்தாநான்சொல்லுகிறேன் பேசாமற்நீனில்வந்தால் (௫௨௰)

வித்தீனமாய்க்காண்படியெனவேந்தனிந்த்ராயன்கேட்டங்
குத்தாவுசொல்லாமலொருதினைவுட்கொண்டோர்ந்தான்
சாகாதுலகாண்டு தானிருப்பாருமுண்டோ
வாகாயிருப்பவரு மாள்வதென்னென்றெள்ளமுற்று
பணிமதிசொல்லத்தனையும் பாங்காய்மனதினுள்ளிக்

கனியொருவனுண்டனவே காவல்லிசொன்ன துவை
ஆராய்ந்துபார்ப்பமென்றே யானைவிட்டுக்கீழிறங்க
நேராயிந்திராயனங்கு நேமிதனில் நின்றனனே
துல்லுல்தனைவிட்டவிதாற் தோற்றமுடன் கீழிறங்க
அல்லும்பகலு மழியாதவனருளால்
கலகமொழிந்ததென்றே கத்தனவிதங்கரத்தில்
பெலமாய்ப்பிடித்தகத்தி போர்க்கப்படாதிவரால்
சட்டமுடன்கம்பர்தமைத் தான்கூவியாவிபுலி
திட்டமுடன் கைவாளைச் சீக்கிரத்தில்வாங்குமென்றார்
இட்டமுடன்கம்ப ரெடுத்தார்கைவாளதனை
மட்டில்லாச்சேனைகளு மன்னராவியைப்பார்த்தார்
நல்லதிக்கேயறிவோம் நாடும்படைவெட்டாமல்
எல்லவர்க்குந்தான்கேட்க இன்பமுடனேயவியார்
எக்காளந்தன்னை யெந்தவிதாமுழக்கத்
துக்கமில்லாவம்பைத் தூணியிலேதான்சேர்த்தார் (௫௧௰)

வாளைத்துடைத்தவிதாம் வாசமுடனேசேர்த்தார்
பூலோக்குதியில்லாதவி போந்தினவர் குருவளிபோல்
சண்டையிட்டபேர்களெல்லாந் தான்மாரியோய்ந்தாப்போல்
பண்டைவினைவிட்டகன்று பாங்காயிருப்படையும்
சட்டமுடனுவியிட்ட தன்மக்காளம்முழக்கத்
திட்டமுடன்கேட்டே சிறந்தவடோச்சியர்கோன்
சண்டையொழிந்ததெனுத் தன்மக்காளம்பிறுவே
அண்டையிலேசெல்வோமென் றனேவடோச்சியர்கோன்
பட்டாவைத்தான்றுடைத்துப் பாங்காயுறைபுகுத்தித்
தட்டாமற்றோதனைச் சங்கையாய்த்தானடத்தி
தன்றேடுசேர்ந்த தளங்களையுந்தான்கூட்டி
மன்றவுன்காவலென்றே மன்னராவியைத்தேடி
நான்முன்றுசென்றதற்பி றுபணவிகிட்டவந்து
கான்மீறிலேவிழுந்து தாழ்ச்சியதுசெய்தனரோ
தாழ்ச்சியதுசெய்து சலாமுமுறைத்தபின்னர்
மீட்சிபெறுவாயெனவே மேனிதனிற்றான்தடவி.
நெருஞ்சோடவியணைத்து நேசமொடிந்தான்மகிழ்ந்து
அஞ்சாதீர்நீர் நினைத்த வங்கருமங்கிட்டுமென்றார்
கிட்டுமென்றசொற்கேட்டே கீர்த்திவடோச்சிசொல்வான்
திட்டுவாரென்றுமுளதக்கோனின்றன்னருளால் (௫௪௰)

அப்போதவியாராங் கானஇந்திராயனைத்தான்
தப்போடுதாரேக்கிக் கொள்கையுடனேசிரித்தே

மன்னன்வலதுகையை வன்மையலிதான்பிடித்தார்
தன்மையாய்த்தாட்சிகள்செய் தானேயிந்திராயனைப்போ
நகரந்தனைநாடி நன்றலியோடேநடந்தான்
பகரிதங்கேபிணங்கள்பாரமலைபோற்கிடந்த
குருதிநிலையாது கூடும்வழிதோறும்
பகருகின்றநன்னெறியிற் பதிந்தவிந்திராயனையே
ஐயமில்லாமலங் கன்பாகத்தானலியார்
கையைப்பிடித்துயர்த்திக்கண்டமட்டுந்தான் தூக்கி
கோட்டைதனிற்புகுந்து கொள்கையுடனேநடந்து
நாட்டையெல்லாந்தான்கடந்து நாடியிந்திராயனுடன்
நாற்பத்தெண்ணாயிரங்கால் நன்றியுள்ளமண்டபத்தில்
ஆர்ப்பித்தவனிருக்கும் அறுகோணப்பீடமதில்
மன்னனொடுமென்சரலி மாதவத்தோடேயிருந்தார்
வன்னமுள்ளசெங்கோல் வடோச்சியர்கோனைப்போது
ஆங்கவன்தன்சேனையொடு மாலிவிலாபக்கமுற்றான்
பாங்கானகம்பர்வந்து பாய்புலிக்குப்பின்னிருந்தார்
இந்த்ராயன்சேனை யிறந்ததுபோய்மீதியுள்ளோர்
வந்திருந்தாரிந்திரன்பின் வாரியைப்போலேவளைந்து (௫௩)

கற்புடையமெல்லிநல்லாள் கன்னிபனிமதிதான்
நற்புடையநாட்டங்கழல் நாயனருமொன்றறிந்தாள்
பூணூற்பிராமணரும் போந்தங்கிருந்தார்கள்
கோணாதநல்ல குதிகாரரும்மிருந்தார்
கூடுஞ்சபைதனிலே கூறுவனிந்திராயனைப்போ
நாடும்படையலியை நன்றாய்முகம்பார்த்து
எந்தனைக்காய்வெட்டவென்றே யென்னிடத்திலேயிசைவு
தந்துவிட்டுப்போன சவுளிவடோச்சியிவன்
மீனைமீன்பாய்ந்ததுபோல் விளைத்துவிட்டிங்கென்பதியில்
பூனைபுலிபாய்ந்ததுபோற் புன்மைவிளைத்தானலியே
என்றனதுகேட்டங் கிருக்கும்வடோச்சிசொன்னான்
நன்றாகக்கேளரசே நானடந்தசெய்தியெல்லாம்
தானடிமையென்பதற்குத் தடையில்லையெம்மரசே
மானமுடனுன்னைவிட மற்றவர்கள்வீரமதோ
கண்டிருந்துஞ்சொல்வதென்ன கத்தனவிதஞ்செய்தி
உண்டுடுக்கஇன்ன முனக்குநாளுண்டுகண்டாய்
உன்மருகனாகியவன் உள்ளசமர்த்தானதெல்லாம்
தன்மனதுக்கேற்றபடி தான்காட்டியாண்டிலையோ
உச்சிபட்டபாடதனை யுன்கண்ணாற்கண்டாயேல்
பட்சிகள்போல்நீதான் பறந்துவிடுவாய்சணத்தில் (௫௪)

எட்டுமலைபோல்வளர்ந்த எந்தலிபுனுயத்தன்
பட்டுவிடுங்களத்தைப் பார்த்தால்நீயூர்தரிக்காய்
உந்தன்படைத்தலைவ ருங்பேச்சைத்தான்கேட்டுந்
சித்தையுயிரிழந்து சேர்ந்தாரேமண்ணினிடப்
சண்டை முகத்தாலிகிட்டச் சபதங்கள்கூறினையே
அண்டையிலேயாலிப்புலிக் காசாரஞ்செய்வதென்னே
வெற்றியுள்ளோனீயிருக்க வேணபடைமாள்வதென்றோ
பத்தியுந்தன்கோட்டையெல்லாம் பாரமலைபோற்பிணங்கள்
சத்திகெட்டடங்கேயுருண்டார் தானுளதுவீரமிதோ
புத்தியுள்ளோன்வெற்றிசெய்யப் போந்தேனென்றேபுகழ்ந்து
தாட்டிகமாய்நீவிடுத்த சபுலக்கெங்கேவரச்சே
வாட்டிறந்தீரங்கியென்போன் மாண்டவகைகேட்டிலையோ
தனுவையொடித்துன்கழுத்திற் றன்மாலைபோட்டம்பர்
மனுவென்றிங்கெண்ணிநின்றாய் மதிக்கிலுன்போலேகோடி
அரசர்களும்போதாதே யறையுந்தன்தம்பியைத்தான்
அரிசத்திற்கொல்லப்புத்துந் துண்டாய்ப்பறந்திலையோ
உந்தன்மகள்நல்ல வுயர்ந்தபனிமதிதான்
இந்தஅலிக்குப்பயந்திங் கேனுனக்குப்புத்திசொன்னாள்
தப்பினேனும்ஆலிக்கென்றே தாஞ்சமர்த்துப்பேசுகிறாய்
ஒப்பிலொருநாழிகைக் குள்ளுநழன்றுபோய்விடுவாய்
தலையுமிழந்து தான்பேசுமாவியும்போய்
நிலையுமுனக்குணவு நீள்புவியிலின்னமுண்டும்
பட்டத்தியானை பட்டது நீபார்க்கிலையோ
நட்டத்திற்குத்தானொருவன் நயத்தினுக்குத்தானொருவன்
கையெடுத்தபுத்தையெல்லாங் களத்திலேதோர்த்தனையே
ஐயமில்லாப்பொன்முடியை யார்ப்பிடுங்குபோக்கினையே
புலியாயிருந்தனையே போஜாலிதன்னிடத்தில்
எலியாயிருக்குகின்றாய் என்னையேன்சொல்லுகிறாய்
ஆலமரத்தோடுகட்டி யாலிபுலியார்தலையைச்
சால்வாள்வீசினனத் தருவிழுதுமூடியதே (௫௭௰)

வெட்டினவெட்டெல்லாம் விருதாவிற்போகாமற்
கிட்டினதுபோலிருக்குங் கிட்டாதகன்றிடுவோ
ஆராலும்வெல்லரிதிங் காலிதலைவாங்கரிது
தீராதநோய்பிடிக்குஞ் செம்பையவைத்துக்கைதொழுதால்
கம்பருக்கிங்குத்தரவு காவலநீசொன்னாற்கால்
உம்பரையும்வென்றிடலா முன்சமத்தைக்காட்டினையே
இந்தக்களத்தி லிம்மாலிதம்மிடத்தில்

வர்த்தனையேயுன் சமர்த்தேன் வல்லலியிடத்தில்
அலியார்தம்வாய்பரிசை யாராலும்வெல்லரிது
சலியாதுவானமட்டுந் தாவிவிடுங்கண்டேனுன்
கோலாகலமாகக் கொண்டேனுனீமானே
மாலாகநற்சுவர்க்கம் வாய்த்திட்டதேயென்றெனக்கு
நெருப்பிற்கிடந்தவனை நீராளமாக்கிவைத்தார்
பெருப்பத்துடன்கோயிற்கட்டிப் பேய்நாயைக்கையெடுத்தாய்
செம்பைவைத்துக்கையெடுத்தாற் சேதம்பிடிக்கும்விட்டுத்
தம்பதியுடைய தன்மப்புறக்கான்படியே
விளைசலைமாதே வேதத்தில்வந்திடென்று
ஆனைசிங்க மறைந்தாவடோச்சியர்கோன்
அலியார்தமைநோக்கி யானவிந்திராயன்சொல்வான்
நலியாதுநாயனைநீர் நன்றாகக்கண்டதுண்டோ (௫௮)

கண்டதுண்டோசொல்லெனவே காவலவன்கேட்டிடவே
அண்டருலகுற்றபுலி யானஅலிசொல்லலுற்றார்
தன்னுடையறாகுதன்னைத் தானறியாமாணிடவர்
மன்னவனைக்காண மறியுண்டோசொல்லுகென்றார்
பின்னுமிந்திராயன் பிர்த்திமொழிசொல்லலுற்றான்
முன்னும்பின்னுமெல்மந்த்ர முத்திதருமென்றுரைத்தான்
சொல்லக்கேளாயரசே,சொல்வனென்றேயாலிசொன்னார்
அல்லாபடைத்தபடைப் பானதிலொன்றுகுமது
பொல்லாதகாபிரதைப் போதுமெனத்தானுரைப்பார்
சொல்லுமதின்விபரஞ் சொருசாகநீகேளு
தன்புருடனைச்சேர்ந்தாற் றொழால்நிலைமாதருக்குப்
பின்புருடனைச்சேர்ந்தாற் பேருலகிற்றன்வசையாம்
அல்லாவைத்தான்புகழ்ந்தா லாகுநலம்பெற்றிடலாம்
இல்லாதமந்திரங்க வீடேற்றந்தாராது
ஆவியழியாதிங் கானவுடற்றனழியும்
ஓவியங்கள்தானழியு முள்ளஇறைதானழியான்
ஆக்கையெவர்க்குமுண்டும் அல்லாவுக்காக்கையில்லை
சேர்க்கையெவர்குமுண்டுஞ் சேர்க்கையில்லைநாயனுக்கு
பிறுதியப்புத்தேயுவாயு பெற்றவர்கட்காசையைந்தாம்
அறுதியைத்துங்கற்றவர்க ளாலயத்தினுள்ளிருப்பார் (௫௯)

மன்னுக்குநான்முகனு மால்நீர்க்குமாலனுமாம்
வண்ணிடிமயேச்சுரனி மால்வெளிசதாசிவனும்
காற்றிற்குநாதமல்லாற் கர்த்தாதான்வேறுமுண்டோ
பார்த்துரையுமென்றே பகர்ந்தாலிந்திராயனப்போ
எதுவாயலிநாப்பா றோழநீகேட்டிலையோ

இதுவெல்லாம்நாயனல்ல வேகன்படைப்பானதுகள்
படைத்தபடைப்பல்லாது பாரவிளையாகாது
ஜடத்திறுயிருறுதல் நானுரைக்கநீகேளாய்
பானைகுடஞ்சட்டி பலபாத்திரங்களெல்லாம்
குயவனதுவெல்லாம் குசவனுண்டாக்கின்றது
உண்டாக்கும்பாண்டமெல்லா முனக்குச்சிவமாகிடுமோ
நன்றாக்கும்நாயனொரு நாளுமுறவல்லனெல்நீர்
உருவில்லனென்றிங் குறைத்தீர்கேளும்மயிலே
நெருநினையாக்கோயிலுக்குநேர்ந்தாற்குகைகூடுவதேன்
பருவமிதைச்சொல்லெனவேயமர்ந்தானிந்திராயனப்போ
கருவில்லருளான கருணையமிழ்துரைத்தார்
நெல்லும்பதரு நிறைந்திருக்குங்கண்டாயே
சொல்லுமந்தக்காற்றாலே தூரப்படுஞ்சாவியெல்லாம்
தண்ணீருங்கள்ளுங் ஜலமுமதைப்போற்றேறுனும்
உண்ணீராற்ற ஏழும்போம் உரைக்குங்கள்ளைக்குடித்தால் (கூா)

தாகந்தெளியாது நானுருவைக்கையெடுத்தாற்
றுகந்தெளிந்துவிடுந் தனியோனைக்கையெடுத்தால்
ஆகமுடன்கண்ணினுக்கு மவ்வொளிபோலாகுமிறை
ஏகமுடனேநிரம்பி யெங்குநிறைந்தபொருள்
எங்குநிறைந்திருப்பா னிறையோனொருவனவன்
பொங்குமொழிகேட்டுப் புகல்வனிந்திராயனப்போ
ஆத்துமாவும்முடனு மாயிருக்கக்கண்டோமோ
சாற்றுவனீரிறையத் தான்கண்டதுண்டோகாண்
கண்டதுண்டோவென் றுரைத்தீர் காவலனேயான்சொலக்கேள்
கொண்டசுரூபமுண்டோ குதாயையான்காண்பதற்கு
சுருபமெடுத்தவனோ தோன்றும்படைப்புள்ளவனோ
அருவுருவமில்லானை யார்காணக்கூடுமென்றார்
அருபமில்லையென்றீ ரன்றானவேதமெல்லாந்
திருவுடனேநன்றாகத் தெளிவுடனேயாருமறை
எட்டியெழுதினதா ரொன்றுடனேசொல்லுமென்று
தாட்டிகமாய்க்கேட்டிடவே தாரலிதாமீதுரைப்பார்
எடுமெழுத்தாணி வென்றெழுதக்கையுளதோ
தேடுகின்றவேதந் திட்டித்தானுண்டாகும்
உண்டாகும்வேதமென்றிங் குரைத்திரலிப்புலியே
நன்றாகநாயனுக்கு நன்னபிகளேதுக்கென்றான் (கூாய)

எதுக்கென்றேயுரைத்த இந்திராயனேகேளாய்
காதுக்குப்பொன்பூணிற் கண்ணுக்கழகதுண்டோ

இந்திராயன்படைப்போர்.

வேதம்விருப்பதற்கு வெற்றியிறைதூதரெசன்றார்
ஆதந்தனைப்படைத்தா னருமவன்வீட்டினுக்கு
சொர்க்கநரகமென்று தோன்றிரண்டுமேடைத்தான்
எக்கமில்லாச்சொர்க்கத்திற்கங் கேர்நபிகளைப்படைத்தார்
குடியேற்றிவேதங் கொடுத்தான்முகம்மதுக்குக்
கொடிதானகும்பியைக் குடியேற்றவேண்டுமென்றே
மாயோன்றனைப்படைத்தான் மாயத்தையுங்கொடுத்தான்
ஆயத்தால்வேதத் தரசர்நபியாகுமென்றே
நபியாகுமென்றுரைத்த நாயனவியேகேளுஞ்
செவிதாய்ப்பிராமணர்கள் தேசத்தினிலேற்றமென்ன
உயர்ந்தகுலமானதென்ன வுத்தவியேசொல்லுமென்றான்
நயந்தஇந்திராயன்சொல்ல நன்றியவிசொல்லலுற்றார்
சுலையுமானன்னபிராட் டோன்றுஞ்சிலபேர்களுண்டும்
நிலையாகக்காலியவர் னேசமுடன்மேய்த்திடுவார்
காலியவர்மேய்க்கையிலே காராம்பசுவிலொன்றைக்
கோலியேகானகத்திற் கொண்டுகழுத்தறுத்தே
வால்தோல்கால்வன்னரம்பும் வல்சாணியோடிரத்தம்
நால்பார்குழியைவெட்டித் தான்புதைத்துநற்சதையை (௬௨௰)

சூட்டுக்கறிபோட்டுக்கள்ளுஞ் சொந்தமெனவேகுடித்தார்
ஒட்டும்பசுவுடையோ னாரொங்குற்றான்தேடி
காட்டகத்திற்றேடுகையிற் கண்டானிக்கள்ளர்தம்மைக்
கூட்டிக்கொண்டுகள்ளர்தம்மைக் குண்டுக்கட்டாய்க்கட்டியபின்
முன்குடுமிபின்குடுமி வீட்டித்தலைசிரைத்து
வன்குழியிலேபுதைத்த வன்சாணியையெடுத்தே
சாம்பலாச்சுட்டதனைத்தான்கள்ளர்நெற்றியிலே
போங்காலிக்கொம்பதுபோற் போட்டிரத்தமுந்தடவி
பசுவினரம்பைப்பல்பூணூல்தானுமிட்டு
ஒசுவாயிருதோளி லுற்றகோற்குடுமிட்டு
மாட்டுடையகோமியத்தை வாயிலேதான்வார்த்தங்
கிட்டுகழுதையின்மே லேற்றியேயூராச்சுற்றி
காட்டிலேயோட்டிவிட்டான் காலியுடையோனவரைத்
தாட்சமாய்க்கெட்டவர்கள் தாமொருபாயமிட்டு
சீர்த்திதனைத்தவசாய்க் கிட்டியப்பிராமணர்கள்
சாத்திரமொன்றேயெடுத்துச் சாதிகளைத்தாவீணிப்பாய்
தங்கள்குலமதிகந் தானென்றுபேசிடுவார்
பங்கமிகப்பட்டோர் பிராமணரொன்றேயுரைத்தார்
ஆகமக்களெல்லா மனைத்துமொருசாதிகண்டீர்
யோதமுள்ளஈமானைப் பொய்த்தோர்கள்தாழ்ந்தகுலம் (௬௩௰)

தாழ்ந்தகுலமென்றலியே சாற்றிநீர்சேளுமென்சொல்
ஆழ்ந்தகருத்தினராய் அநேகநூலோதிநலம்
நேர்ந்தகுறிகாரர்சொற்று நிஜமாயிருப்பதென்னே
சார்ந்தவைகள்சொல்லுமென்றே சாற்றினனிந்த்ராயன்
குறியெல்லாமெய்யெனவே கூறினீர்கேளரசே
செறிவானகெர்ப்பமதிற் சேர்ந்திருக்கும்பிள்ளைதன்னை
ஆண்பெண்ணென்றேயுரைத்தா லக்குறியுமெய்யாகும்
வீண்பேசொடுத்தமொழி மெய்யாமோகேளரசே
நல்லநாட்டான்பார்த்து நல்முகூர்த்தமும்பார்த்து
வல்லமையாகி வகைவிபரமும்பார்த்து
ஓமசந்திதான்வளர்த்தங் குள்ளபலசாத்திரமும்
ஆமெனவேதான்பார்த்த அந்தத்திருமங்கிலியம்
தாலிகட்டுமுன்றையிலே தானறுப்பதெவ்விதமோ
சாலிகென்றுந் தருமனிவனென்றும்
வாலிப்பொன்று மவுத்துவர்தால்விட்டிடுமோ
வலியிவனென்றவ காலமுமறியும்
சாத்திரமுங்குறியுந் தானுரைப்பதோர்நிசமோ
சூத்திரமெல்லாம்படைத்த தய்யோனொருவனிசம்
மற்றதெல்லாம்வீணெனவே மன்னாவிசொன்னவுடன்
உற்றதொருவிசன முற்றுரைப்பேன்கேண்மலியே (௬௪௰)

எறும்புகடையானதலைக் கெல்லாமுயிருளதே
அறவதனைக்கொல்லுவதிங் காகுமோஆகாதோ
சொல்லுமென்றான்மன்னன் தொடர்ந்தவிதாமீதுரைப்பர்
பல்லுயிர்கள்தன்னிற் பகைசிறிதுண்டானதுண்டும்
பாம்புபுலிகடுவாய் பழிசெய்யுஞ்சாதியுண்டும்
ஆம்படியேகொன்றிடலாம் அல்லதுகொல்லாகாது
மனுவுக்குணவான மற்றும்படையுண்டதுகேள்
பனுவலுடன்பிசிபிப் பட்டாலருந்திடலாம்
பூமானில்லாக்கருபா போற்றும்படைதினவர்க்குக்
கோமானுனைப்படிக்குக் கொன்றுதீனுக்கிடலாம்
ஆதியலியேநான் அறைவேனொருவசனம்
நீதியிறையோன் நிச்சயமாய்க்காப்பதற்கு
எங்கேயெனவுரைத்தா யேர்தலையான்சொலக்கேள்
இங்கேமனுக்களுக்கே யேத்தமானுனதிலும்
தங்குநிசையென்கோன் தானுடலிலுள்ளனென்றும்
தங்குமனதிற் றனெண்ணங்கொண்டிருங்காண்
மனதுகலங்காதே மற்றும்பால்நீர்துபோற்
றனதாகவெப்படைப்புந் தானிருப்பான்கண்டீரே

கண்டாலென்றேயுரைத்த கத்தனவியேகேளும்
உண்டாக்குராயன் ஒருவனெனவேயுரைத்தீர் (௯௰௧)

தீனவர்க்குமட்டுமுண்டோ சேர்காபிருக்குமுண்டோ
தானமுடனஞ்சொல்லுமென்று தானவிலயக்கேட்டவுடன்
சொல்லத்தான்கேளாசே சோர்வில்லாதேயுரைக்கக்
கல்லுக்கட்டேரைக்குயிர் காத்திரணமுங்கொடுப்போன்
ஆக்கும்பொழுதுள்ளவ ரைக்குமுதவியுண்டு
காக்குமிறையெங்குமுண்டுங் காபிருக்குந்தீனவர்க்கும்
பார்த்தாலெல்லிவிசலாம் பகருமிருட்காபிர்களே
நேத்தியாயெங்கு நிரப்பமாய்நிற்குகின்ற
கோமான்சுவர்க்கபதி கோதில்லாதீன்வெளிச்சம்
தேமாங்கனியருந்தத் தீனோர்புகுவாரதில்
நாகமிருளாகு நாகமதற்கேயணவாய்த்
தூரகமுள்காபிரவர் குழுமதிலேபுகுவார்
காபிரையுந்தீனரையுங் கட்டுரையாய்ச்சீர்தூக்கிற்
ரூபரமாய்வெண்மதியுந் தானிருளும்போலாகும்
கத்தனிசுலாமதையுங் காபிரையுஞ்சீர்தூக்கில்
பித்தளையும்பொன்னுமென்று பேசலாமென்றுரைத்தார்
பேய்கொண்ட காபிர்களைப் பேயதுதானேசிரித்து
நாய்புணர்ச்சையானதுபோல் நடுச்சந்திமீதிழுக்கும்
மாட்டுப்பீதன்னைச்சுட்டு மார்பதிலும்நெற்றியிலும்
மீட்டுமதின்கோமியத்தை மேல்தலையிலேதெளித்து (௯௰௨)

கோட்டிகொள்ளுங்காபிர் கொடியநரகாள்வாரிகள்
தாட்டிகமாய்லோகங்களைத் தனதாகவேசேர்த்து
காய்சியடித்துருவாய்க் கண்மூக்குங்காதுமவைத்து
மீட்சியில்லாதேயுருப்பு மேன்மையாயுண்டுபண்ணி
கோயிலிலேவைத்துக் கும்பிட்டீர்சாமியென்றுங்
காவியேகள்ளரதை யாவியெடுத்தேயுடைத்து
செட்டிகடைவைத்துத் தீன்வாங்கும்வேளையிலே
கட்டிமொழிபேசிடுமோ சாமியென்றுசொல்லிடுமோ
முட்டியேகும்பிட்டீர் மோட்சமதுதான்தருமோ
அட்டியொன்றுமில்லாம லருந்தீனில்வந்திடுக்காண்
ஆராலுங்காணாத வாதிதனையேயவனெங்கில்
நேரானசொர்க்கபதி நேசமுடனேபெறலாம்
அம்மனென்று சாமியென்றிங் கானபொம்மை தன்னைச்செய்தீர்
கும்பமுலைப்பெண்களைத்தான் கூடுவரோசாமியவர்
உண்டுபண்ணிப்பார்க்கின்றவ னாசாரிகாபிரவன்
ஈன்றுத்தொழவேண்டு மேகபெரியவனை

சாமியவனுக்குஞ் சாற்றுகின்றவெவ்விடமும்
தோமிலாவல்லான் துதியெலாங்கைக்கொளுவான்
பேசத்தசாமிமுன்னைப் பேயாட்டுத்தாளுடி
கூசாமல்நிற்குகின்ற கோவதையற்குத்தாலிபணையம் (௯௭)

காசுபணங்கொடுத்துக கண்டவர்கள்சேர்ந்திடுவார்
பூசைபண்ணிநித்தம் பொங்குநீர்வேண்டாங்கர்ன
சாமியுடபெண்டுகளைத் தாலிவைத்தழிப்பதுண்டோ
ஆமியசாமி யவளையுமேசேர்வதுண்டோ
குளிகைநடத்துகிறீர் குணங்கெட்டகல்லதற்கு
அழிமையுள்ளபுத்துகட்கே யாணவெண்ணெய்த்தெங்கிளநீர்
மெய்கொக்கவார்த்து விழுந்துதெண்டஞ்செய்யுகிறீர்
தைக்காட்டெண்ணெயதிற் றான்சுவறுமோமேனி
கல்லுபுடைக்குமப்போ கானற்பறங்கும்புத்தைத்
தொல்லைப்படுத்துகிறீர் தோசமல்லவோநாளை
பரமேச்சுரனெனவே பாராச்சிலையுண்டுபண்ணி
நந்தமெல்லாந்தான்கூட்டி நாடியதேமேறி
வடம்பூட்டியெல்லோரும் வருத்தமிகப்பட்டேந்து
திடம்பூட்டியேயிழுக்கச் செய்கிறீர்நாயனென்றால்
தேரும்நடக்காதோ சிரிப்பவர்க்குடலெடுத்தீர்
யாருமிதைப்பாராமல் ஆணபுத்திதன்னைவிட்டு
கொஞ்சப்படுத்துகின்றீர் கூடுவார்தீநரகில்
அஞ்சப்படைத்தோனை யன்பாய்வணங்கிடுவீர்
செத்தஜடலமதைத் தீயிலேதான்போட்டுச்
சற்றுமதியில்லாமற் றுமொருவனையேயவி (௯௮)

கம்புகொண்டுகிண்டியதைக் கண்டுகெடச்சொல்லுகிறீர்
வம்பிங்கிதுகளெல்லாம் வல்லவனேயெங்குமுள்ளான்
பெண்ணுருவுமாணுருவும் போராயவல்காண்பான்
கண்ணுருவாமாணிக்கத்தைக் கண்டுகொண்டுதான்கூடுவான்
அப்படியுஞ்செய்வாரோ வாதிதனக்கேற்றிடுமோ
இப்படியுங்காவிரிடருய்நடப்பதென்றே
தாய்தகப்பன்செத்தவுடன் தான்மொட்டையாய்த்தலையை
ஆயத்துளபிள்ளையை யதபுகேடாய்ச்செப்புகிறீர்
நாயன்பொறுப்பாரோ நாளெல்லாம்வீணுச்சே
ஞாயவிந்திராயனைப்போ துக்கமாய்ச்சொல்லலுற்றான்
நாளெல்லாம்வீண்தபசாய் நான்கேட்டேனென்றழுது
பாழ்செய்தோமென்று பதைபதைத்தானித்திரன்தான்
அழுதவனைத்தானமர்த்தி வாவிபுலியீதுரைப்பார்

பழுதுப்படாதீமானைப் பாங்காகச்சொல்லுகென்றார்
அலியாரின்கைபிடித்தே யாகுமிசுலாமானான்
மெலிவெல்லாந்தான்விடுத்து மேன்மைபெறத்தீறுனான்
கோமான்தன்தேசமெல்லாங் கொண்டார்பெருந்தீனை
ஆமாவென்றீமானை யனைவோருங்கொண்டனரே
அருமைக்குணத்தோடு மாறைநகரூரினில்வாழ்
தருமனகுமதுட தன்மகனுகிவர்தோன் (சுகூய)

திருவளருஞ்செல்வஞ் சிறந்தாரவுத்தனுமே
பெரும்புகழாய்வாழப் பெரியோனுதவிசெய்வான்
அரசனொடுசேர்ந்தவனை யன்பாகத்தானிறுத்திச்
சுரர்பதியெல்லாம்புகழத் தொழுதாரலியுடனே
அப்போதிபுலீசங் கனியாயமென்றழுதான்
இப்போதென்கூடவொட்டா இப்படிச்செய்தாரலிதாம்
சலித்தானிபுலீசு தானிந்திராயன்சொல்வான்
ஒலித்தானமுள்ளவரே உம்மையவியேகேளும்
எந்தன்பனிமதியை யான்பெற்றபேறதனை
இந்தவுலகுதன்னில் யான்சொல்லப்போறதென்றே
முந்தவொருபெண்ணை மோகமுடன்தாகிகொண்டான்
சொந்தத்தபசிறந்து துய்யமனையாளோடு
கோவிற்குளங்கட்டிக் கோடிமுதற்றன்மஞ்செய்து
வாவிகளுண்டாக்கி வளர்போஜனங்கொடுத்து
தேவியருநானுஞ் சிறந்தநல்லநோன்பிருந்து
யாவியேறித்த மன்னமிகவேகொடுத்து
நித்தந்தபசிருந்தோம் நீதியுள்ளபெண்ணாகக்
கத்தன்கொடுத்தான் கண்மணிபோற்பின்னொருபெண்
பெற்றபலனாகவந்தாள் பேரும்பனிமதியாம்
சுத்தமுள்ளவென்மகள்தான் சோராதழகுடையாள் (எ௱)

அறிவுக்கடலான வாயிழையாளென்மகளைப்
பொறுதியுள்ளவென்மகளைப் போந்தவடோச்சியர்க்கு
கல்யாணஞ்செய்யக் கணமுறிவரைத்தளித்தேன்
நல்லாவதுபோல நாட்டமொடுசெய்வதற்கே
பொறுதியாயூர்கோலம் போந்துவரும்வேளையிலே
அறுதிகெட்டவோலையினு லங்கெழுதுஞ்செய்திகண்டேன்
மூத்தமருமகனை மோசமதுசெய்துவந்தான்
ஏத்தபடையெடுத்திங் கித்தனைக்கும்வெற்றிசெய்தான்
சாற்றரியவெற்றிசெய்தான் தானுமுங்கள்நல்லுதவித்
தோற்றத்தினுலே துரையேகிடைப்பர்க

தங்களுதவியினுற் றுனீடுசெய்தானே
அங்கமுடனிருந்தா னுனவடோச்சியர்கோன்
அன்றவன்பேர்சொன்னதிரு லங்கவனுக்கேதாவி
இன்றெழுதவுங்கள்மனத் திசைந்தபடிசொல்கவென்றான்
கூறுமொழிகேட்டுக் கூறுவாராவிபுவி
பேறுபெறும்நல்ல பெண்ணுள்பனிமதியை
வாழும்வடோச்சியர்க்கு வன்மையுடனேகொடுக்க
நாளுமனதெனவே நாயனவிதாமுரைத்தார்
நாடுமொழிகேட்டவுட னன்றாகஇந்திரர்கோன்
தேடுந்தெருக்களெல்லாஞ் சிறப்பாயலங்கரித்தே (௭ா௰)

பந்தற்கெதுவிதமாய்ப் பாவினையுண்டானதெல்லாம்
அந்தமுடன்கோலமிட்டங் கந்நகரவீதியெல்லாம்
ஜோடிகள்செய்தே துரையாம்வடோச்சிதன்னை
நாடியேயூர்கோலம் நன்றாய்வருகவென்றே
தள்ளாவடோச்சிதன்னைத் தானேமணமாக
வெள்ளானைமீதேற்றி வீதியெங்குஞ்சுற்றிவந்தே
வந்துமணப்பந்தரத்தில் வாய்ப்பாய்த்தவிசில்வைத்தே
கொந்துரையும்பூங்குழலாட் கோதைபனிமதிக்கு
பாதாதிகேசமுதல் பாங்காயலங்கரித்தே
வேதன்விதிப்படி மெல்லியரைத்தான்கூட்டி
ஆதியவிமுன்விடுத்தா ரப்போபனிமதிதான்
நீதியவிதம்பதத்தில்நேசத்துடனேபணிந்தாள்
கண்டங்கவியார்களுக் கல்புமிகவேகுளிர்ந்து
விண்டானொன்பிள்ளையென்றே வெற்றியோடங்குரைத்து
உந்தன்மனம்போலுறுதி யுண்மையுள்ளாளைக்காணேன்
அந்தமுள்ளநல்லவரு ளாண்டோன்தருவனென்றார்
ஈமானைக்கொள்ளென் றிசைத்தாரவியார்தாம்
சிமானுரைத்தவுடன் செப்புவாள்தேன்மொழிதான்
கோமானபிதனையுங் கொள்கையுடனுங்களையும்
தோமேதுமில்லாமற் றுதியாருதித்திரையில் (௭௨௰)

கண்டேன்மனுமதனிற் கண்டுநாவிமானைக்
கொண்டேனந்நாளிலென்றே கோதைகவிமாவுரைத்தாள்
அஞ்சாதுதன்று பரிவைக்கவிமாவுரைத்தார்
மஞ்சார்குடையிறைவுல் மார்க்கமுறையுள்ளதெல்லாம்

வாயினால்வல்லிசொல்ல வள்ளலலிகேட்டிருந்தார்
கூயினாரிந்திரனைக் கோதையுளாகேட்டனையோ
கேட்டேனலிபாசே கெட்டிகெட்டியென்றுரைத்தான்
சிட்டேன்வடோச்சியர்க்குச் செய்யுந்தவமிதென்றே
நிக்காகெழுதி நிறைவேற்றியங்கலிதாம்
மிக்கானபாத்திகா மேன்மையொடுமோதினரோ
எக்காலும்வாழ்ந்திருமென் றேகனலிதாமுரைத்துச்
சக்கொன்றிலாத ஸதயல்பணிமதியின்
கையைப்பிடித்தேகொடுத்தார் காவல்வடோச்சியிடம்
மெய்யாகஎல்லோருமேன்மைத்துவாவிரந்தார்
வல்லியருதல்ல வடோச்சியுமொன்றாயிருந்தார்
சொல்லிலடங்காத சுகம்பெற்றுவாழ்ந்திருந்தார்
ஜெகமெங்குந்தான்புகழுஞ் செல்வனிந்திராயனுக்கு
முகம்மதுநீல்சுல்த்தான் மன்னனைப்பேருங்கொடுத்து
முலுத்தான்சுலுத்தானாய் மோகமுடன்வாழ்த்திரொன்று
அனுப்பாகவெற்றாளும் அஞ்சியோகையொடுக்கும் (எகல)

ஆலயத்திலுள்ளிருந்த வாடல்புத்துகானையெல்லாம்
வாலயமாய்த்தானெடுத்து வாரிதனிலேயெறிந்தார்
தங்கச்சிலைகளெல்லாந் தானுலையிற்போட்டுருக்கி
அயகத்துடன்பள்ளிகட்டி யாலயங்களுள்ளதெல்லாம்
பொங்கத்துடனிடித்துப் போந்தபள்ளிவாசற்கட்டி
இங்கிதமாயாதி யிறையவனைத்தான்றொழுதார்
பெரியவனைத்தான்வணங்கும் பேரானஆரையில்வாழ்
தரியலர்கள்சிங்கமெனுந் தகுமாரகுமதுசேய்
பள்ளிகட்டிப்பேறுபெற்ற யன்பிராவுத்தனைப்போல்
அள்ளிக்கொடைகொடுத்தா னன்பாகவாழியவே
ஆறுதிங்களாவிபுலி யங்கிருந்துதீன்விளக்கித்
தேறுதலாயத்தீனைத் திறமாகவேபயிற்றி
அந்நகாப்பெண்கட்கெல்லா மானஇசுலாம்பயிற்றி
இந்நகரில்வாழ்ந்திருமென் றின்பாகவாழ்த்தியங்கு
மூன்றாலிதாரிழந்த மோசனமார்மங்கையார்க்குப்
பின்தாலிகட்டிவைத்துப் பேரறிவுதான்பயிற்றி
கத்திபென்றேசில்லாக் கட்டளையர்த்தாலிறுத்தி
நற்றீனதனையிந்த நாட்டிலுள்ளோர்க்கோதிவையும்
அல்லும்பகலு மணிநகரவீதியெல்லாம்
சொல்லுங்கலிமாவைச் சோர்வில்லாதோதிவையும் (எசல)

உத்தரவுசெய்தங் குடனலியார்மன்னவனின்
சித்தருள்ளதேவியர்க்குந் தீன்முறைமையேபயிற்றி
குத்துபாவண்டாக்கிக் கூண்டசிறுபிள்ளைகட்கு
நற்றுதலாயோதிவைக்க நல்லஅறிவாளர்தம்மை
ஓதிவையுமென்றங் குடனில்மையுங்கொடுத்து
ஆதியருட்பெற்ற அலியார்நிலைநிறுத்தி
வட்டானமண்டலத்தில் வல்லியர்க்கெல்லாந்தீனைத்
தட்டாமலேவருத்தித் தானுஞ்சிலநாளிருந்து
வாசம்பொருந்தும் வடோச்சிநகருள்ளதெல்லாம்
தேசம்புகுந்தே சிறக்கவேதீனாக்கி
இந்திராயன்தன்மக ளேந்தல்பனிமதிக்கு
முர்துநல்லக்காளை மொழிதாகிபெண்டனை
தாலியிழந்தவளைத் தானலியாரங்கழைத்துக்
கோலியொருமாப்பிள்ளைக்குக் கொள்கையுடன்தாலிகட்டி
ஈமானிலாக்கியவ ளிருந்தவூரிற்காசாய்க்
கோமானவிநிறுத்திக் கொள்கைபலதும்முறைத்தே
தக்கமில்லாதிந்திராயன் தன்னிடத்திலோர்செய்தி
மக்கநகர்போகவென் றுமன்னரலிதாமுரைத்தார்
துக்கமெல்லாந்தீர்ந்த சுலுத்தானுலாக்கலுற்றார்
அக்கணருளா லாலதபிலையக்காண (௭௰௧)

நானும்வருவனென்று நாயகநபிபாலிற்புக்கித்
தீனிசுலாமானதனுற்சென்றுகச்சுத்தான்தொழுதே
இக்குவரவேண்டுமென்றங் கேழாயிரந்தேரிற்
றங்கமதுதானேற்றிச் சாலவஞ் ஞாறுனையின்மேல்
ஆடையாபரண மன்பாயினிதேற்றிப்
பாடலங்கள்கூட்டம் பதினான்காயிரத்துடனே
மங்கைபனிமதியும் வள்ளல்வடோச்சியருஞ்
சங்கைபெறவேண்டுமென்றே தங்கூட்டத்தோடெழுந்தார்
அலியாருடன்கூடி யன்பாகவேயெழுந்தங்
கொலியார்சடந்போலவுமொங்குந்தான்கடந்து
தன்றாயுதமெடுத்துத் தான்கம்பரிபின்வரவே
கொண்டாடித்தீனோர் குழாங்கள்நெருங்கிவர
மக்கநகர்செல்கவென்றே மார்க்கமெல்லாங்கடந்து
திக்குகளெல்லாம்விசயஞ் செலுத்துகின்ற நாயகராம்
வல்லநபிபாலில்முன்னில் வழுத்தவொருகூதழைத்துச்
சொல்லுவீர்தான்வர சோபனமென்றாலியார்

நல்லதென்றுதூதர் நடந்தார்வழிதொலைத்து
அல்திகராக்கூந்த லரிவைக்குநாயகமாம்
பாத்திமாநாச்சியரும் பண்பானநந்நபியும்
வுத்தமுள்ளயார்களுநல் லின்பஅசுகாபிகளும் (௭௬௰)

அலிபோனதெவ்விடமோ ஆலிவரக்காணிலமே
மெலிவேதுவந்ததுண்டோ மீண்டுவரக்கண்டிலமே
எண்ணிவிசாரமிட்டங் கெல்லோருந்தான்சலிப்பாய்
தண்ணீர்மதியதுபோற் றனிருக்கும்வேளையிலே
அலியாரனுப்பிவிட்ட ஆளோடிப்போயுடனே
மலிவானபள்ளியிற்போய் மக்கநபிதாள்பணிந்து
வாராலியென்றே வள்ளலிடத்தேயுரைத்தார்
மாறுகஆண்மையுள்ள மாநபியும்யார்களுடன்
வீற்றிருக்கும்வேளையிலே வேந்தரலியாரும்புக்கிச்
சாற்றரியசேனையுடன் றனுமலியுல்லாவும்
இந்திராயனுடனங் கேந்தல்வடோச்சியரும்
வந்தார்கள்மக்கநகர் மாநகரவீதியெல்லாம்
வள்ளல்வடோச்சியுடன் வாலப்பனிமதியும்
எள்ளவில்லாநந்நபிதா னின்பமுடனேபணிந்து
கம்பருஞ்சென்றுநபி காலதனிற்றன்பணிந்து
அம்பரமெல்லாம்புகழு மருமதுதீன்சுல்தானும்
மக்கநபியுல்லாதம் வண்பதத்திலேபணிந்து
மிக்காகவேயதபாய் பிசுமிக்காலிற்றனிருந்தார்
ஆலநபியிடத்தி லாலியெடுத்தேயுரைத்தார்
வலநடந்தசெய்தி யெல்லாம்படிப்படியே (௭௭௰)

சொன்னாலியெடுத்துச் சொல்லநபிதாங்கேட்டு
என்றுருயிரோ யிறையுமக்குவெற்றிசெய்வான்
மன்றவுன்காவலென்றே மார்போடுதான்சேர்த்துப்
பொன்னானமேனிதனைப் புதிதாகக்கண்டோமென்றே
கொசுவாயவரவரா கூடியவிலையைத்தழுவி
ஒசுவாகவேயிருந்தா ரோதுவாராலிபுலி
இங்கனிருக்கின்றே ரொப்படைக்குந்தானெசமான்
நங்கிலாதீன்றோர் நன்றியென்றேயாலிசொன்னார்
பனிமதிதான்சென்று பயகாம்பர்தம்பதத்தில்
இனிமையுடனேயிறைஞ்சா ளேகநபியேதுரைப்பார்
ஊந்தனினைவறிவே னுள்ளீமான்கொண்டவள்நீ

அந்தமுடன்சுவர்க்க மாதிதருவாவெனவே
சாற்றிஞராலநபி தானேதாவடோச்சிசென்றங்
கேத்தநபிதாட்பணிந்தா ளின்புற்றுநந்நபிதாம்
வள்ளல்நபியுல்லா வடோச்சிதனையும்மகிழ்ந்தே
எள்ளளவில்லாறும்பெயர்தா னென்பெயரொன்றேயுரைத்தார்
அரசன்வலதுகைகளை யன்பாய்நபிபிடித்துப்
பிரசவமெனவேயிருந்தீ பெற்றியுடனேமகிழ்ந்து
கதியாவெருமதியுங் காட்சிபெறவேகொடுத்துக்
கெதிர்சேர்வையென்றே கிருபைத்துவாவுஞ்செய்தார் (எஅ)

மன்னன்கொடுபோனதெல்லா மாநபிக்குக்காணிக்கையாய்ச்
சொன்னதானங்கொடுத்துத் தியகச்சுசெய்துநன்றாய்
தேசத்துக்குப்போகவென்றே சேர்த்துபுறப்பட்டனரே
வாசமுடன்தீனை வளர்ந்தேறச்செய்யுமென்றே
மன்னனையுநல்ல வடோச்சியையுமாதினையும்
தந்நகர்க்குச்செல்லுமென்றே தானனுப்பினார்நபிஞர்
வாழுமனைபோயிருந்தார் மன்னரவியாரும்
ஆளுமனையி லவரவர்களுஞ்சேர்ந்தார்
முசம்மதுசல்த்தான் மாநகரந்தான்சேர்ந்தார்
சுகமுடனேதீனுஞ் சுகமாகவாழியவே
வடோச்சியுந்தேவியரும் வாழுநகரிற்புகுந்தார்
மடக்கொடியுந்தானு மணமாகவாழியவே
வானோடுபூமி வளமாகவாழியவே
தீனுந்துனியாவுஞ் சிறப்பாகவாழியவே
உலாகொடுத்தாஆலிந்தா மும்மையுடன்வாழியவே
தரையிற்புகழவருஞ் சங்கையுள்ளஆரைநகர்
செஞ்சொற்குதவிசெய்யுந் தீரனகுமதுமகனும்
பொஞ்சாபுகழ்ராவுத்தப் பிள்ளையவன்தான்வாழி
அம்மானையைப்படிக்கு மனைவோரும்வாழியவே
பொம்மானருளாற் பெரியோரும்வாழியவே (எகூ)

இன்புற்றுக்கேட்டவர்க ளெல்லோரும்வாழியவே
அன்புற்றுக்கேட்டோ ரனைவோரும்வாழியவே
ஆரைநகர்வாழு மகுமதருள்புத்திரனும்
பெருதவுமீராப் பிள்ளைமிகவாழியவே
சுத்தனருட்பெற்ற காதுசாவாழியவே
சுற்றமுடன்ராவுத்தப் பிள்ளையும்வாழியவே

ஆனைநகரெல்லோருமன்பாகவாழியவே
பாரைப்புரக்கும் பண்பரசர்வாழியவே
அல்லாவருளு மாலநபிமன்றுட்டும்
வல்லமுகியிந்தின் வண்மைவரிசைப்பேறும்
அரியமுகலீன்க வனைவர்வரிசைப்பேறும்
வரிசைத்தலில்செய்தவர்க்கு மன்னிதிதம்வாழியவே
பாடினவர்சுற்றம் பலபேரும்வாழியவே
நீடூழிகாலம் திரப்பமாய்வாழியவே
ஆமீனுமீனென் றனைவோரும்வாழியவே
பூமீதிலெல்லோரும் புகழாகவாழியவே (௮௰)

இந்திராயன்படைப்போர்

இரண்டாம்பாகம்-முற்றிற்று.

இபுனியந்தன்படைப்போரின் தொடர்ச்சியாகிய இந்திராயன் படைப்போ ரிரண்டாம்பாக முழுமையு முற்றிற்று.